REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 7 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 83 | Thursday 07, April, 2022 | 20 பக்கங்கள் | 30/-




நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு

## பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக ரீதியில் தீர்க்க சகல கட்சிகளுக்கும் சபாநாயகர் அழைப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக ரீதியில் தீர்வு காண முடியும் என எதிர் பார்ப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். இந்த வார இறுதிக்குள் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான பொதுவான திட்டத்தை வகுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்ட அவர்,இதற்கு தீர்வு காணாவிட்டால் பல உயிர்களை இழக்க நேரிடலாம் என்றும் எச்சரித்தார். நேற்று பாராளு மன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,நாட்டு நிலைமை குறித்து

06

## தங்கத்தின் விலை திடீரென வீழ்ச்சி!



நாட்டில் தங்க விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

செட்டியார் தெருவின் நேற்றைய நிலவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 175,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அச்சங்கத்தின் பொருளாளர் ஆர்.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

06

ஜனாதிபதியை குறை கூறுவதால் பிரச்சினைகள் தீராது

## நாட்டின் நிதி நெருக்கடிக்கு அரசு மட்டுமே பொறுப்பல்ல

பாராளுமன்றம் மூலமே தீர்வு காணல் அவசியம்
- அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

*லோரன்ஸ்செல்வநாயகம்,ஷம்ஸ்பாஹிம்*



நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடிக்கு அரசாங்கம் தனியே பொறுப்புக் கூற முடியாது. பாராளுமன்றத்தினூடாக அதற்கு தீர்வு பெற்றுக் கொள்வது அவசியமென நிதியமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில்

06

69 இலட்சம் மக்களின் ஆணையை பெற்ற தலைவர்

# எந்தக் காரணத்துக்காகவும் ஜனாதிபதி பதவி விலகார்

தற்போதைய நெருக்கடி நிலைக்கு நிச்சயம் தீர்வு காணப்படும்



**பாராளுமன்றத்தில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உறுதிபடத் தெரிவிப்பு**

*லோரன்ஸ்செல்வநாயகம், ஷம்ஸ்பாஹிம்*

நாட்டில் 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருபோதும் தமது பதவியை இராஜினாமா செய்யப் போவதில்லையென ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகத்தை விரும்பும் அனைவரும் அதற்காக ஒன்றிணையுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோமென்றும் அவர் சபையில் தெரிவித்தார். மக்களையும் நாட்டையும் சீர்குலைப்பதற்கு செயற்படுவோருக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணமிது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான சர்ச்சையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

06

## ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் சபை இரு தடவைகள் ஒத்திவைப்பு!

*லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்*



ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் சபையில் நேற்று பரபரப்பான சூழல் ஏற்பட்டதோடு ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு எம்.பிக்களுக்கிடையே மோதல் நிலை ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக சபாநாயகர் 10 நிமிடங்களுக்கு சபையை ஒத்திவைத்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் தலைமையில் நேற்று கூடியது. சபாநாயகரின் அறிவிப்பு மற்றும் தினப்பணிகளை தொடர்ந்து நாட்டு நிலைமை தொடர்பில் சபைக்குள் சர்ச்சை ஏற்பட்டது. நிகழ்ச்சி நிரலுக்கமைய பாராளுமன்ற

06

## மருந்து இறக்குமதிக்கு WHO நிதி வழங்குகிறது

03

## டொலர் பிரச்சினைக்கு எம்மிடம் தீர்வுள்ளது!

சபையில் சஜித் பிரேமதாச தெரிவிப்பு



நாட்டின் டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தம்மிடம் தீர்வுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பென்டோரா ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நாட்டு டொலர் கொள்ளையை அந்தந்த நாடுகளில் இருந்து இந்நாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் டொலர் பிரச்சினைக்கு உடனடி தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் என

06

## அவசரகாலச் சட்டம் ஜனாதிபதியால் நீக்கம்

வர்த்தமானி அறிவித்தல் வெளியானது



ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்தை (5) நள்ளிரவுடன் இல்லாதொழிக்கும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் அமுலாகும் வகையில்

06

அப்பாவிகளான உங்களை பலிகொடுத்து

## ஆட்சியை கைப்பற்ற சில கட்சிகள் காத்திருப்பு

ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பியல் நிஷாந்த

*லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்*



உங்களை பலிகொடுத்து ஆட்சிக்கு வர சில கட்சிகள் காத்திருக்கின்றன. அவதானமாக இருங்களென முன்னாள் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தும் இளைஞர், யுவதிகளுக்கு எச்சரிக்கை

06

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

கல்வி அமைச்சு MINISTRY OF EDUCATION

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு இன்று (07) முதல் விடுமுறை வழங்கப்படுவதாக கல்விமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்துண்டிப்பு நெருக்கடிகள் காரணமாகவே பாடசாலைகளுக்கு முன்கூட்டியே விடுமுறை வழங்கப்படுவதாக கல்விமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்வாண்டு

06




## இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கும் ஐநா சபை

மனித உரிமைகள் பேரவை அறிக்கை வெளியீடு!

03



## இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ15 கோடி போதைப்பொருள்

தமிழகம் தூத்துக்குடியில் பறிமுதல்

03



## பிரதி சபாநாயகரின் இராஜினாமாவை ஜனாதிபதி நிராகரிப்பு

03

கொவிட் 19 தொற்று பரவல்

## புதுவருட காலத்தில் மிக கவனம் அவசியம்

Dr.ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் தமிழ் சிங்களப் புத்தாண்டு காலத்தில் அதிகரித்து காணப்பட்டதால், இப் புத்தாண்டு காலத்தில் அனைத்து மக்களும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

06

## TPAயின் ஒத்திவைத்த போராட்டம் இன்று

தலவாக்கலையில் ஏற்பாடு



ஊரடங்கு சட்டம் காரணமாக, பிற்போடப்பட்ட போராட்டத்தை இன்று (07) தலவாக்கலை நகரில் நடத்தவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது.

கடந்த 03ஆம் திகதி தலவாக்கலை நகரில் தமிழ் முற்போக்கு கூட்டணி போராட்டத்தை நடத்த திட்டமிட்டிருந்தபோது, ஊரங்கு சட்டம் காரணமாக, அது பிற்போடப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும், இன்று (07) ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில்

06

## நிதி அமைச்சை ஏற்குமாறு சஜித்,அநுரவுக்கு அழைப்பு

முழு ஒத்துழைப்பு தருவதாகவும் அறிவிப்பு



முடிந்தால் 06 மாதங்களுக்கு நிதி அமைச்சர் பொறுப்பை ஏற்று தமது திறமையை காண்பிக்குமாறு சஜித் பிரேமதாசவுக்கும் அநுர குமார திசாநாயாக்கவுக்கும் ஆளும் தரப்பு எம்.பியும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ரொஷான் ரணசிங்க அழைப்பு விடுத்தார். நாட்டின் தற்போதைய நிலைமை

06

நான் இளம் பாராளுமன்ற உறுப்பினர்:

## முன்மாதிரியாக செயற்படுவது என் முன்னாலுள்ள பொறுப்பு

பதவி விலகல் குறித்து ஜீவன் கருத்து

*(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)*



நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் இளம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் சிறந்த முன்மாதிரியாக செயற்பட வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு

06





## கிழக்கு கடற்படை தளபதி ஆளுநரை சந்தித்து பேச்சு

கிழக்கு கடற்படை கட்டளையின் புதிய தளபதி ரியர் அட்மிரல் கே.ஜே.குலரத்ன கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்தார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில், கிழக்கு கடற்படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் இடம்பெறும் சட்டவிரோத சுற்றாடல் அழிவை நிறுத்துவதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என குலரத்ன தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கடந்த ஆண்டை விட இந்தியா – சீனா எல்லைப் பாதுகாப்பிற்கான பட்ஜெட் ஆறு மடங்கு அதிகரிப்பு



எல்லை உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத்தின் (பிஐஎம்) கீழ் இந்தியாசீனா எல்லைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ஆறு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு (எம்ஹெச்ஏ) செவ்வாய்க்கிழமை மக்களவையில் தெரிவித்துள்ளது.

பாஜக எம்பி திலீப் சைகியா கேட்ட கேள்விக்கு பதிலளித்த உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய், வடகிழக்கு மாநிலங்களின் எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

BIMன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பட்டியலிட்டு, MHA கடந்த ஆண்டை விட 2020/21 இல் இந்தியாசீனா எல்லைப் பகுதிகளுக்கான BIM நிதியை 42.87 கோடி ரூபாயில் இருந்து 2021/22 இல் 249.12 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது என்றார். சுமார் ஆறு மடங்கு அதிகம். அதேசமயம் 2019/20க்கான நிதி 72.20 கோடி ரூபாயாக இருந்தது.

2019/2020 ஆம் ஆண்டில் இந்தியமியான்மர் எல்லைக்கு அரசாங்கம் 20 கோடி ரூபா ஒதுக்கியது, இது 2020/21 இல் ரூ 17 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது, ஆனால் மீண்டும் 2021/22 இல் ரூ 50 கோடியாகக் குறைந்தது.





## கொழும்பு – கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மஹா கும்பாபிஷேகம்







கொழும்பு கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மஹா கும்பாபிஷேகம் நேற்றுக்காலை கும்பாபிஷேக குருக்கள் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. ஆலய இராஜ கோபுர கலசத்துற்கும், மூலஸ்தான பிரதான கலசத்திற்ம் கும்பாபிஷேகம் நடைபெறுவதையும், கலந்து கொண்ட பெரும் திரளான பக்தர்களையும் கோமாதாவிற்கு பூஜை நடைபெறுவதையும், மூலஸ்தான அம்பாள் அலங்கரிக்கப்படடு காட்சி தருவதையும் காணலாம். (படம் : வத்தளை விசேட நிருபர்)

# சர்வதேச செய்திகள்

# உக்ரைனின் முக்கிய நகரங்களில் ரஷ்யப் படை உக்கிர தாக்குதல்

## புதிய தடைகளுக்கு தயாராகும் மேற்கத்திய நாடுகள்

உக்ரைனின் மரியுபோல் மற்றும் கார்கிவ் நகரங்களில் ரஷ்ய பீரங்கிகள் நேற்று உக்கிர தாக்குதலில் ஈடுபட்ட நிலையில், மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது மேலும் தடைகளை விதிக்க தயாராகி வருகின்றன.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் முற்றுகையில் உள்ள தெற்கு துறைமுக நகரான மரியுபோல் கிட்டத்தட்ட தொடர்ச்சியான தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது. அங்கு ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் உணவு, குடிநீர் அல்லது மின்சாரம் இன்றி சிக்கியுள்ளனர்.

“நகரில் மனிதாபிமான நிலை மிக மோசமடைந்துள்ளது” என்று பிரிட்டன் இராணுவ புலனாய்வுத் துறை நேற்று தெரிவித்தது.

“மின்னொளி, தொடர்பாடல், மருத்துவம், சூடேற்றும் வசதி அல்லது குடிநீர் இன்றி கிட்டத்தட்ட 160,000 குடியிருப்பாளர்கள் சிக்கியுள்ளனர். ரஷ்யப் படை மனிதாபிமான உதவிகள் செல்வதை தடுத்து



தற்காப்பாளர்களை சரணடைய அழுத்தம் கொடுத்து வருகிறது” என்று அதில் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் தகவலை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் 11 மனிதாபிமான வழிகள் ஊடாக சிக்கி இருக்கும் பொதுமக்களை வெளியேற்றுவதற்கு நிர்வாகம் முயற்சிப்பதாக உக்ரைன் பிரதி பிரதமர் இரினா வெரெஷ்சுக் தெரிவித்துள்ளார். மரியுபோலில் இருக்கும் மக்கள் சொந்த வாகனங்களில் அங்கிருந்து வெளியேற அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ரஷ்ய படை கடந்த வாரம் தலைநகர் கியேவின் புறநகர் பகுதியில் இருந்து பின்வாங்கிய நிலையில் உக்ரைனின் தெற்கு மற்றும் கிழக்கில் தமது தாக்குதல்களை அதிகரித்துள்ளது. இரண்டாவது மிகப்பெரிய நகரான நாட்டின் வடகிழக்கில் உள்ள கார்கிவ் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

கிழக்கு பிராந்தியமான லுஹான்ஸ்கில் இருக்கும் குடியிருப்பாளர்களை அங்கிருந்து வெளியேறும்படி நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இந்தப் பகுதி ரஷ்யாவின் புதிய தாக்குதலுக்கு இலக்காகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை அறிவிக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. புச்சாவில் நடந்த படுகொலைகள் குறித்து ரஷ்யா மீது குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், இந்த கூடுதல் பொருளாதார தடைகள் விதிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமும் போர்க் குற்றங்களுக்காக ரஷ்யா மீது புதிய தடைகளை அறிவிக்கத் திட்டமிடுகிறது. நிலக்கரி இறக்குமதியைத் தடைசெய்வது, 22 பில்லியன் டொலர் வர்த்தகத்தைத் தடுப்பது போன்றவை ஆராயப்படுகின்றன.

அதேபோன்று ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதியைத் தடை செய்யவும் ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிடுகிறது.

இதேவேளை அதிகமான மேற்கத்திய நாடுகள் ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற்றி வருகின்றன. இத்தாலி 30 ரஷ்ய இராஜதந்திரிகளைப் பாதுகாப்பைக் காரணங்காட்டி அந்நாட்டிலிருந்து வெளியேற்றியது. டென்மார்க் 15 ரஷ்ய இராஜதந்திரிகளை வெளியேற்றுவதாகக் கூறியது. ஸ்பெயின் 25 பேரையும் ஸ்வீடன் மூவரையும் வெளியேற்ற முடிவு செய்துள்ளன.

புச்சா நகரப் படுகொலையைத் தொடர்ந்து அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்நிலையில் ரஷ்யா புச்சா நகரச் சம்பவத்தை நிராகரித்துள்ளது. அது தன் பெயரைக் கெடுக்க வெளியிடப்படும் பொய்யான தகவல் என்று ரஷ்யா கூறுகிறது.

உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி ஐ.நா பாதுகாப்பு சபையில் கடந்த செவ்வாயன்று உரையாற்றினார். தமது நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் குற்றங்களுக்கு ரஷ்யப் படை பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பை ஆரம்பித்த பின்னர் முதன் முறையாக செலென்ஸ்கி பாதுகாப்பு சபையில் பேசினார். தலைநகர் கியேவுக்கு அருகே உள்ள புச்சா சிறு நகரில் பொது மக்கள் கொல்லப்பட்ட விதத்தையும் அவர் கடுமையாகச் சாடினார்.

ஆயிரக்கணக்கான உக்ரைனியர்கள் ரஷ்யாவுக்கு நாடு கடத்தப்பட்டிருப்பதாகவும் செலென்ஸ்கி குற்றஞ்சாட்டினார்.

## சீனாவில் தினசரி தொற்று 20,000ஐ தாண்டி உச்சம்

சீனாவில் கொரோனா பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் பதிவான அதிகபட்ச தினசரி சம்பவமாக நேற்று புதன்கிழமை 20,000க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



நேற்று புதன்கிழமை சீனாவில் 20,472 தொற்று சம்பவங்கள் பதிவானதோடு எவரும் உயிரிழக்கவில்லை என்று தேசிய சுகாதார ஆணையம் குறிப்பிட்டுள்ளது. இது நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட அதிகபட்ச தினசரி நோய்த் தொற்று சம்பவமாக உள்ளது. வேகமாகப் பரவக்கூடிய ஒமிக்ரோன் திரிபின் பிறழ்வு ஒன்றை ஷங்காய் நகருக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சீனா கொரோனாவை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையை பின்பற்றும் நிலையில், நோய்த்தொற்று அதிகரிப்பது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

## நேபாள பிரதமர் டியுபா வாரணாசி நகர் வருகை

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட நேபாளபிரதமர்ஷெர்பஹதுர் டியுபா மற்றும் அவரது மனைவி ஆர்சு ரானா டியுபா ஆகியோர் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யனாத் உடன் வாரணாசியில் உள்ள காலபைரவர் கோவிலில் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

மூன்று நாள் விஜயமாக கடந்த வெள்ளிக்கிழமை டியுபா இந்தியா வந்தார். 2021 ஜூலை மாதம் பதவி ஏற்ற அவரின் முதலாவது வெளிநாட்டு விஜயமாக இது இருந்தது.

இந்த விஜயத்தின் கடைசி நாளில் அவர் வாரணாசி வருகை தந்தார். அங்கு அவருக்கு பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னதாக கடந்த சனிக்கிழமை இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த டியுபா இரு நாட்டு உறவுகளை பலப்படுத்துவது பற்றி கலந்தாலோசித்தார். இதன்போது பீகாரின் ஜயங்கரில் இருந்து நேபாளத்தின் குர்தா வரையான 35 கிலோ மீற்றர் ரயில் இணைப்பை இரு பிரதமர்களும் தொடங்கிவைத்தனர்.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 7 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
06 முதல் 11 வரை
சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் பங்குனி 24
ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: மரண யோகம்
திதி: சஷ்டி



# இலங்கைக்கு 2022 முதல் காலாண்டில் 1.412 பில். டொ. வெளிநாட்டு முதலீடுகள்

## கிடைத்துள்ளதாக முதலீட்டுச் சபை தெரிவிப்பு

2022 முதல் காலாண்டில் 1.4 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் முதலாவது காலாண்டுப் பகுதியில் 1,412 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 33 முதலீட்டு யோசனைகள் கிடைத்துள்ளதாக முதலீட்டு சபை நேற்று தெரிவித்தது.

2021 ஆம் ஆண்டுக்கு இணைந்ததாக அது 80 % வளர்ச்சியை காட்டுவதாக முதலீட்டுச் சபை தெரிவிக்கிறது.

இந்த முதலீடுகளிடையே எரிபொருள் , மீளுறுவாக்க வலு சக்தி மூலங்கள் (சூரிய மற்றும் காற்று), கனரக தொழில்துறை,சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படை வசதிகள் உள்ளடங்குவதாக டி.வி. சானக்க எம்.பி தெரிவித்தார்



தொற்று மற்றும் நிலையற்ற பொருளாதார நிலைமையின் பாதிப்பையும் கருதாது முதலீடுகளை கவர்வதற்கும் மற்றும் திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெற்றிக் கொள்ளமுடிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

முதலீட்டுச் சபை முதலீட்டாளர்களுக்காக நிறுவப்பட்டுள்ள புதிய முதலீட்டு வசதிகளை வழங்கும் மத்திய நிலையத்தின் (IFC) ஊடாக முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து முதலீட்டு செயல்பாடுகளையும் அரசின் ஏனைய இணைந்த நிறுவனங்களுடன் இணைந்து மிகவும் வசதியாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடிந்துள்ளதாக கூறிய அவர், இது தற்போதைய அந்நிய செலாவணி நிதி நெருக்கடியை வெற்றி கொள்வதற்குள்ள முக்கிய சாதகமான சக்தியாக

06

# ரமழான் சிந்தனை

## ரமழான் மாதத்தின் சிறப்பு

இஸ்லாமிய வருடக் கணிப்பில் மாதங்களின் எண்ணிக்கை 12 ஆகும். அதில் ரமழான் ஒன்பதாவது மாதமாக உள்ளது. இம் மாதத்தில் நோன்பு நோற்பதைக் கட்டாயமாக்கியுள்ள அல்லாஹ்தஆலா இறைவணக்கங்களில் ஈடுபடுவதையும் ஊக்குவித்திருக்கின்றான்.

என்றாலும் இஸ்லாமிய வருடக் கணிப்பிலும் 12 மாதங்கள் காணப்படுகின்ற போதிலும் ரமழான் மாதத்தில் நோன்பு கடமையாக்கப்பட்டிருப்பதன் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்வது பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும்.

அதாவது ரமழான் மாதத்தின் இறுதிப் பத்து நாட்களிலுள்ள ஒற்றைப் படையான ஒரு இரவில் தான் உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொருவரதும் ஈருலக வாழ்வுக்கு நேர்வழி காட்டும் அல் குர்ஆன் பாதுகாக்கப்பட்ட பதிவேட்டில் (லஹ்ஹூல் மஹ்பூல்) இருந்து முதல் வானத்திலுள்ள பைத்துல் இஸ்ஸாவுக்கு இறக்கியருளப்பட்டது. அவ்விரவை லைலத்துல் கத்ர் என்ற ஆயிரம் மாதங்களை விடவும் மேலான இரவாக (அல் குர்ஆன் 97:03) அல்லாஹ் ஆக்கி வைத்திருக்கின்றான்.

அதேநேரம், 'ரமழான் மாதம் எத்தகைய (மகத்துவமுடைய)தென்றால் அதில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டும் அல் குர்ஆன் (என்னும்) வேதம் இறக்கியருளப்பட்டது. அது (நன்மை, தீமையை) பிரித்தறிவித்து நேரான பாதையை தெளிவாக்கக்கூடிய வசனங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது (அல் குர்ஆன் 2:185) என்றும் அல்லாஹ் குறிப்பிட்டிருக்கின்றான்.

இதன் ஊடாக ரமழான் மாதம் எத்தகைய மகத்துவத்துக்கும் சிறப்புக்கும் உரியது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதேநேரம் அல் குர்ஆன் அருளப்படுவதற்கு முன்னர் அருளப்பட்ட தெளராத், இன்ஜீல், சபூர் போன்ற இறைவேதங்களும் ரமழான் மாதத்தின் வெவ்வேறு நாட்களில் அருளப்பட்டதாக வரலாற்று பதிவுகள் உள்ளன.

ஆகவே மனிதனை உடல், உள ரீதியாக மாத்திரமல்லாமல் பௌதீக, ஆன்மீக ரீதியாகவும் புடம் போட்டு ஈருலக வாழ்வுக்கும் ஏற்ப புடம்போட்டு பக்குவப்படுத்தக் கூடிய ரமழான் நோன்பை அதற்கேயுரிய ஒழுங்கில் நிறைவேற்றுவோம். அதன் ஊடாக அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் அடைந்திடுவோம்.

மர்லின் மரிக்கார் ...



அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தினால் சுகாதார அமைச்சுக்கு முன்னால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மருந்து தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.
(படம் – சுலோச்சன கமகே)

# மருந்து இறக்குமதிக்கு WHO நிதி வழங்குகிறது

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) இணங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த உதவியை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக்கொண்டுள்ளது.

இலங்கையில் மருந்து விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக அரசாங்கம் உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இந்த உதவிக்கான கோரிக்கையை முன்வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# பிரதி சபாநாயகரின் இராஜினாமாவை ஜனாதிபதி நிராகரிப்பு



பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்வதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்த கடிதத்தை, ஜனாதிபதி

06

உங்கள் தினகரன் வாரமஞ்சரி யில்
மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன் எழுதும் பத்தி
ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள்
இவ்வாரம் முதல் வெளியாகும்

**எண்ணெய் மற்றும் எரிவாயு துறைகளில்:**

# இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க ஓமான் சுல்தானுக்கு பிரதமர் கடிதம்

எண்ணெய் மற்றும் எரிவாயு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஓமானின் சுல்தான் ஹைதம் பின் தாரிக்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கலாநிதி பந்துல குணவர்தன தலைமையிலான ஐந்து பேர் கொண்ட தூதுக்குழு ஓமான் சுல்தானகத்துக்கு (27 – 28) விஜயமொன்றை மேற்கொண்டிருந்தது.

இதன்போதே பந்துல குணவர்தன, தனது தூதுக்குழுவினருடன், ஓமான் எரிசக்தி மற்றும் கனியவள அமைச்சர் கலாநிதி மொஹமட் அல் ரூம்ஹியை சந்தித்து, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கடிதத்தை சுல்தான் ஹைதம் பின் தாரிக்கிக்கு கையளித்தார்.

இதன்போது இலங்கை மற்றும் ஓமானுக்கிடையே எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் எரிவாயு



சேமிப்பு வசதிகளை அரச மட்டத்தில் நிறுவுவதில் சாத்தியமான ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.

பந்துலவின் இருதரப்பு வர்த்தக விஜயத்தை ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. ஓமான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் தலைமையிலான 17 உறுப்பினர்களைக் கொண்ட ஓமான் வர்த்தகக் குழு கடந்த

06

# இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கும் ஐ.நா சபை

## மனித உரிமைகள் பேரவை அறிக்கை வெளியீடு!

இலங்கையில் நிலவும் சூழ்நிலைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பாக மனித உரிமைகள் பேரவை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியான போராட்டங்கள் மூலம் மக்கள் தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் நிலையில், அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

06

# இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ15 கோடி போதைப்பொருள்



## தமிழகம் தூத்துக்குடியில் பறிமுதல்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது, மன்னார் குறூப் நிருபர்

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற சுமார் 15 கோடி ரூபா மதிப்புள்ள மேத்தாம் பே தமைன் என்ற போதைப்பொருளை இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

06

NLB NATIONAL LOTTERIES

# தேசிய லொத்தர் சபை விற்பனை முகவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தரும்

## விசேட அறிவித்தல் !

அரசினால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச்சட்டம் காரணமாக ஏப்ரல் 3ஆம் திகதி நடைபெறவிருந்த NLB ஜாதிக ஜயவரனய சீட்டிழுப்பின் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

2022.04.03 ஞாயிற்றுக்கிழமை என அச்சிடப்பட்டுள்ள லொத்தர்கள் எதிர்வரும் தினங்களுக்கும் செல்லுபடியாகும் விதத்தில், 2022 ஏப்ரல் மாதம் 04, 05 மற்றும் 06 ஆகிய தினங்களில் சீட்டிழுப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடைபெறும் என தெரிவித்துக் கொள்கின்றோம்.

| திருத்தப்பட்ட சீட்டிழுப்பு நடைபெறும் திகதி | லொத்தர் சீட்டில் அச்சிடப்பட்டுள்ள திகதி | லொத்தர் சீட்டின் வகை | சீட்டிழுப்பு இலக்கம் |
|---|---|---|---|
| 2022.04.04 திங்கள் | 2022.04.03 | மெகா பவர் | 1074 |
| | 2022.04.03 | தன நிதானய | 756 |
| | 2022.04.03 | ஜாதிக சம்பத | 1232 |
| | 2022.04.04 | தன நிதானய | 757 |
| 2022.04.05 செவ்வாய் | 2022.04.03 | மஹஜன சம்பத | 4726 |
| | 2022.04.04 | மெகா பவர் | 1075 |
| | 2022.04.04 | NLB ஹந்தஹன | 38 |
| | 2022.04.05 | தன நிதானய | 758 |
| 2022.04.06 புதன் | 2022.04.04 | மஹஜன சம்பத | 4727 |
| | 2022.04.05 | மெகா பவர் | 1076 |
| | 2022.04.06 | தன நிதானய | 759 |
| | 2022.04.06 | ஜாதிக சம்பத | 1233 |

தலைவர்
தேசிய லொத்தர் சபை



National Lotteries Board

தினகரன் THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
பிலவ வருடம் பங்குனி மாதம் 24ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

ஊக்கம் எனும் ஒரு பொருளைத் தவிர, வேறு எதனையும் நிலையான உடைமை என்று கூற இயலாது.

# ஆர்ப்பாட்டங்களின் போர்வையில் வன்முறைகளை தூண்டும் முயற்சி!

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி பல இடங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர். இந்த ஆர்ப்பாட்டங்களை கலவரங்களாக மாற்றிவிடும் முயற்சிகளும் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. இதற்கான சான்றாதாரங்களும் உள்ளன.

குறிப்பாக ஜனாதிபதியின் மிரிஹான இல்லத்திற்கு அருகில் கடந்த மார்ச் 31 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாற்றப்பட்ட சம்பவம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

இந்த வன்முறையின் ஊடாக பலர் காயங்களுக்கு உள்ளானதோடு, 39 மில்லியன் ரூபா பெறுமதியான பொதுச்சொத்துகளுக்கும் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரம் முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே எம்.பி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொசான் ரணசிங்க எம்.பி ஆகியோரின் இல்லங்களுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் ஊடாக வன்முறைகள் ஏற்படுத்தப்பட்டு சொத்துகளுக்கும் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல எம்.பியின் கண்டி இல்லத்திற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதான வன்முறையின் போது பொலிஸார் சிலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன்படி தற்போதைய தேசிய நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மக்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களை குழப்பி அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும், இந்நெருக்கடிகள் நீடிப்பதற்கு வழிவகை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் தெரிகிறது.

இப்பின்புலத்தில்தான் முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க, 'நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையை முன்வைத்து மக்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதை நாம் மதிக்கின்றோம். ஆனால் நாட்டை அழிவுக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளுக்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏற்கனவே இடம்பெற்றுள்ள சில ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் இடம்பெற்றமைக்கு குழப்பங்களை விளைவிக்கும் கும்பல்கள் ஆர்ப்பாட்டங்களில் புகுந்து வன்முறையாக செயற்பட்டதன் வெளிப்பாடே காரணமாகும். இவ்வாறான செயற்பாடுகள் பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் எதிர்பார்க்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்காது. வன்முறையுடன் கூடிய குழப்பங்கள் சேதங்களையும் அழிவுகளையுமே நாட்டுக்கு தேடிக் கொடுக்கும்.

அதேநேரம் இந்த ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தியும் அந்த ஆர்ப்பாட்டங்களின் ஊடாகக் குழப்பங்களையும் வன்முறைகளையும் ஏற்படுத்தியும் அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளும் இடம்பெறவே செய்கின்றன. அதேவேளை இந்நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை குழப்புவதையும் தாமதப்படுத்துவதையும் நோக்காகக் கொண்ட செயற்பாடுகளும் கூட சூட்சுமமான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதியின் அழைப்புக்கு ஏற்ப இத்தேசிய நெருக்கடிக்கு ஒன்றிணைந்து தீர்வு தேட முன்வர மறுத்துள்ள அரசியல் கட்சிகள், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை முன்வைப்பதாகவும் இல்லை.

மக்கள் தாங்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தாலும், அதன் ஊடாகக் குழப்பங்களை தோற்றுவித்து அற்ப அரசியல் இலாபம் தேடும் வகையில் சில சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருப்பதை மக்கள் மறந்து விடலாகாது.

அதனால் கலவரங்களுக்கும் பொதுச்சொத்துகளுக்கு சேதங்களை விளைவிப்பதற்கும் ஆர்ப்பாட்டங்கள் துணை போக இடமளிக்கலாகாது. மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள போதிலும், மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய எல்லாத் தரப்பினரையும் உள்ளடக்கி தீர்வு தேட முயற்சிக்கின்றன. இருந்தும் எதிர்க்கட்சிகள் மாத்திரமல்லாமல் அரசாங்கத்துடன் இணைந்திருந்த சில கட்சிகளும் அதற்கு ஒத்துழைப்பதை தவிர்த்துக் கொண்டுள்ளன.

அதாவது இத்தேசிய நெருக்கடிகளில் மக்கள் மேலும் மேலும் சிக்கித் தவிப்பதற்கு வகை செய்யும் வகையில் இக்கட்சிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனை நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தாலும், அவை நாட்டின் அமைதி சமாதானத்திற்கு குந்தகமாகவோ பொதுச் சொத்துக்களுக்கு தேசங்களை விளைவிக்கும் வன்முறைகளாகவோ அமைய இடமளிக்கலாகாது. இது தொடர்பில் உச்சபட்ச பொறுப்புணர்வுடனும் முன்னவதானதுடனும் செலுத்தப்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

## சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தில்

# 127 பிறப்பு சான்றிதழ்கள், 315 குடியுரிமை சான்றிதழ்கள் 34 ஆர்.ஆர்.பி. கடவுச்சீட்டுக்கள் வழங்கிவைப்பு

சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகராலயம் 127 பிறப்புச் சான்றிதழ்கள், 315 குடியுரிமைச் சான்றிதழ்கள் மற்றும் 34 ஆர்.ஆர்.பி. கடவுச்சீட்டுக்களை (மார்ச் 11, 22, 29 திகதிகளில் ) சான்சரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று விஷேட கொன்சியூலர் முகாம்களில் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கி வைத்தது.




நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டி, கோவை மாவட்டம் பூலுவப்பட்டி, ஈரோடு மாவட்டம் பவானிசாகர், அறச்சலூர், சேலம் மாவட்டம் பவளத்தானூர், மதுரை மாவட்டம் ஆனையூர், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, புழல் ஆகிய இடங்களில் கடந்த மார்ச் 11ஆம் திகதி நடத்தப்பட்ட விஷேட முகாமில் 101 இலங்கையருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.


இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம், ஈரோடு மாவட்டம் அரச்சலூர், திருவண்ணாமலை மாவட்டம் தவசி, மதுரை மாவட்டம் ஊச்சப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் அதியனூத்து, புதுப்பட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் இலங்கையருக்கு மார்ச் 22 ஆம் திகதி 158 குடியுரிமைச் சான்றிதழ்களும், 17 பிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மார்ச் 29ஆம் திகதி நடத்தப்பட்ட விஷேட முகாமில், புதுக்கோட்டை மாவட்டம் அலியானிலை, கோட்டப்பட்டு, திருச்சி மாவட்டம் வாழவந்தான்கோட்டை ஆகிய பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்கள் கலந்து கொண்டனர். 157 குடியுரிமைச் சான்றிதழ்களும், 09 பிறப்புச் சான்றிதழ்களும் அங்கு வழங்கி வைக்கப்பட்டன. மேலும், இந்தத் தூதரகமும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரும் இணைந்து நடத்தும் தன்னார்வமாக தாயகம் திரும்பும் செயன்முறையில் பங்கேற்க விரும்பும் வெளிநாட்டிலுள்ள இலங்கையருக்காக 34 ஆர்.ஆர்.பி. (அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டம்) கடவுச்சீட்டுக்களும் இதே முகாமில் வழங்கப்பட்டன.





# மண்ணையும், மக்களையும் உயிரென மதித்து வாழ்ந்த மருத்துவர் வாமதேவன்



## கலை, இலக்கிய, சமூக நேசர் மறைந்தார்

இலங்கையின் வடபகுதியில் புகழ்பெற்ற கலை, இலக்கிய சமூகநேசரும், மருத்துவருமான தம்பிப்பிள்ளை வாமதேவன் தெல்லிப்பழையில் தமது 99 வயதில் கடந்த மாதம் 28 ஆம் திகதி மறைந்தார். அவரது இறுதிநிகழ்வையும், இறுதி யாத்திரையையும் இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள அன்பர்கள் காணொளி ஊடாக பார்த்துக் கொண்டிருந்தபோது, கண்ணீர் மல்கினர்.

அன்பர் வாமதேவன் எனது நீண்டகால நண்பர். எனக்கு மட்டுமல்ல, இலங்கையில் கலை, இலக்கியம், ஊடகம் சார்ந்து இயங்கிய பலருக்கும் அவர் நல்ல நண்பராகவே திகழ்ந்தவர்.

மருத்துவர் வாமதேவன் மறைந்தார் என்ற துயரச்செய்தியை நண்பர்கள் வட்டாரத்துக்கு முதலில் தெரிவித்த கலை, இலக்கிய ஆர்வலர் நவரத்தினம் இளங்கோ அவர்களும் அன்னாரின் நெருங்கிய நண்பர்தான்.

வாமதேவன் தமது இளமைக்காலத்தில் மருத்துவம் படித்து மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்று M R C P பட்டத்துடன் திரும்பியவர். அவர் நினைத்திருந்தால் இங்கிலாந்திலோ அல்லது வேறு மேலைத்தேய நாடுகளிலோ தமது மருத்துவத்துறையில் பணிகளை மேற்கொண்டு, தமது குடும்பத்தினரையும் அழைத்து வாழ்ந்திருக்கலாம்.

ஆனால், அவர் தமது ஊரான தெல்லிப்பழையிலிருந்து மருத்துவம் படிக்கச் சென்ற போது, தனது தாயார் கூறிய அறிவுரையை கேட்டு, அதன் பிரகாரம் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்.

தான் கற்கும் மருத்துவம் மக்களின் சேவைக்குத்தானேயன்றி, தனியார் துறை மருத்துவமனைகளுக்கு அல்ல என்ற மனிதநேய சிந்தனையுடன் அரச பொது மருத்துவமனைகளிலேயே இறுதிவரையில் நலிவுற்ற மக்களுக்காக பணியாற்றினார்.

அவரது புதல்விகள் இருவர் அவுஸ்திரேலியாவில் இரண்டு மாநிலங்களில் வசிக்கின்றனர். இறுதியாக அவர்களிடம் கடந்த ஆண்டு வந்தவர், தனது எஞ்சியிருக்கும் காலத்தில் ஊரோடு சென்று வாழவே விரும்புவதாகக் கூறி விடைபெற்றுச் சென்றார்.

இப்போது அவரது விருப்பத்தோடு 99 ஆண்டுகாலம் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து நினைவுகளை எமக்குத் தந்து விட்டு நிரந்தரமாக விடைபெற்று விட்டார்.

மருத்துவர் வாமதேவன் அவர்கள் கொழும்பு – நீர்கொழும்பு வீதியில் வரும் வெலிசறையில் அமைந்துள்ள அரச மார்பு நோய் மருத்துவமனையில் பிரதம மருத்துவ அதிகாரியாக பணியாற்றிய 1970 காலப் பகுதியிலேயே எனக்கு அறிமுகமானார்.

மல்லிகை ஜீவா, பிரேம்ஜி ஞானசுந்தரம், கவிஞர் அம்பி, ராஜஸ்ரீகாந்தன், சோமகாந்தன் உட்பட பல இலக்கியவாதிகளின் நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்த வாமதேவன் அவர்கள், எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பணிகளுக்கும் பக்கபலமாக இணைந்திருந்தவர்.

மல்லிகை ஜீவாவுக்கு பலவழிகளிலும் உறுதுணையாக விளங்கினார். பழகுவதற்கு இனியவரான வாமதேவனின் எளிமை எம்மை சிலிர்க்க வைக்கும்.

யாழ்ப்பாணத்தில் மல்லிகை காரியாலயம் இயங்கிய போது அங்கே செல்லும் வாமதேவன், அங்கு 'புத்தக ஷெல்ப்' ஒன்றையும் தானே அமைத்து இதழ்கள், புத்தகங்களை அடுக்கி வைத்தாராம். இதுபற்றி ஜீவா மல்லிகையிலும் எழுதியிருக்கிறார். மல்லிகை கொடிக்கால்களின் வரிசையில் வாமதேவனின் பெயரும் இணைந்துள்ளது.

வாமதேவன் தேர்ந்த வாசகர். அவ்வப்போது மல்லிகையில் வெளியான சில சிறந்த கதைகளை படித்து வாசகர் கடிதங்களும் எழுதியவர்.

மல்லிகை ஜீவாவின் மூத்த புதல்வி சுவர்ணலதாவுக்கு இதயத்தில் துவாரம். அவரது சிகிச்சை தொடர்பான பல தேவைகளை கவனித்தவர் வாமதேவன். கொழும்பு மருத்துவமனையில் அந்தப் பிள்ளையை சத்திரசிகிச்சைக்காக அனுமதித்த போது, வாமதேவனே நேரில் வந்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

இவ்வாறு அக்காலத்தில் பலருக்கும் உதவிகள் புரிந்து வாழ்ந்தவர் அவர். வெலிசறை காசநோய் சிகிச்சை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பலருக்கும், இவர் செய்த உதவிகளை மறக்க இயலாது.

இவரது மூத்த புதல்வி சட்டத்தரணி திருமதி ஜெயந்தி விநோதனும் இவரைப் போன்றே கலை, இலக்கிய, சமூக நேசர்தான். மல்லிகை அவுஸ்திரேலிய சிறப்பிதழை வெளியிட்ட போது ஜெயந்தி விநோதனின் ஏற்றுமதி – இறக்குமதி நிறுவனமே அதன் பிரதிகளை எமக்கு அனுப்பி வைத்தது. நாம் மெல்பனில் 2001 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்திய முதலாவது தமிழ் எழுத்தாளர் விழாவிலும் வாமதேவன் கலந்து சிறப்பித்தார்.

அச்சமயம் வாமதேவனும் கவிஞர் அம்பியும் சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தே எழுத்தாளர் விழாவின் இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர், சிட்னியில் 2005 ஆம் ஆண்டு நடந்த ஐந்தாவது எழுத்தாளர் விழாவிலும் கலந்து கொண்டார். ஜெயந்தி விநோதனும் மெல்பன் – சிட்னி விழாக்களில் உரையாற்றினார்.

தாய்நாட்டின் மீதும் பிறந்த ஊரின் மீதும் மருத்துவர் வாமதேவனுக்கிருந்த பற்றுதல் எமக்கெல்லாம் முன்மாதிரியானது. சமகால கொவிட் பெருந்தொற்றுக்கால நெருக்கடிக்கு மத்தியில் கடந்த ஆண்டு சிட்னியிலிருந்து அவர் தாயகம் திரும்பிய போது, எஞ்சியிருக்கும் காலத்தில் ஊரோடு வாழவே விரும்புகின்றேன் என்று கவிஞர் அம்பியிடம் சொன்னாராம்.

அவ்வாறு சென்ற அவர் தனது வீட்டைச் சுற்றி வளர்ந்திருந்த மா, கமுகு, வாழை முதலான மரங்களையும் தனது சொந்தப் பிள்ளைகளாக போற்றியவர் என்பதை அவரது இறுதி நிகழ்வில் இரங்கல் உரையாற்றியவர்களின் உரைகளிலிருந்து அறியமுடிகிறது. வாமதேவன் அவர்கள் மருத்துவத்துறையில் ஈடுபடும் ஏனையோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்த உதாரண புருஷர்.

லெ.முருகபூபதி...
அவுஸ்திரேலியா

# தமிழ் பேசும் மக்களிடம் கல்வி விழிப்புணர்வை ஊட்டியவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

இலங்கையிலும் தமிழ்பேசும் மக்கள் வசிக்கின்ற நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் மறைவு பொதுவாக கல்வித் துறைக்கும், நாட்டுக்கும் பாரிய இழப்பாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'பேராசிரியர் சோ. சந்திரசேகரம் முன்னர் கொழும்பு பல்கலைகழக கல்விப் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தது மட்டுமல்லாமல், நாடாளாவிய ரீதியில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்சியையூட்டுவதற்கு அயராது பாடுபட்ட ஒருவராக இருந்திருக்கிறார். தமிழ் மக்களின் கல்வியில் மட்டுமல்ல,பொதுவாக சிறுபான்மை மக்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் முஸ்லிம்களும் சிறந்து விளங்க வேண்டும் என அவர் மனதார விரும்பினார். இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்திலும், சமூகம் சார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது பங்களிப்பு மகத்தானது.



குறிப்பாக மலையகத்தில் பிறந்தவர் என்ற வகையில் மலையக மக்களைப் பெரிதும் மையப்படுத்தியதாக அவரது எழுத்துக்கள் இருந்தன. அவர் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி நேர்காணல் செய்யப்படுபவராகவும் இருந்திருக்கிறார். அத்துடன், தனிப்பட்ட முறையில் நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நான் எழுதிய தந்தை செல்வநாயகம் பற்றிய ஒரு நூலைப் பாராட்டி அவர் எழுதிய கருத்துகளை இன்றும் நான் பெரிதாக மதிக்கின்றேன்.

எந்தவிதமான வித்தியாசமும் இன்றி, கல்விச் சமூகத்தினருடன் மட்டுமல்லாது சாதாரண பொதுமக்களுடனும் கூட மனம் விட்டு பழகக் கூடிய தன்மையை இயல்பாகவே அவர் கொண்டிருந்தார். எந்த விதமான ஆரவாரமும் இன்றி கல்விப் பணியில் தனது காலத்தை அவர் முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பதிவு செய்கின்றேன்' என்று ஹக்கீம் எம்.பி குறிப்பிட்டுள்ளார்.



## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி அனுதாபம்

# புலம்பெயர் தமிழரின் தமிழ்க் கல்விக்கு அத்திவாரம் அமைத்துக் கொடுத்தவர் பேராசிரியர் சந்திரசேகரன்

**புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழர்களுக்கு 1990 காலப்பகுதியில் தமிழ்மொழிப் பாடத்திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அக்காலப் பகுதியில் நான் பேராசிரியர் சிவத்தம்பி மற்றும் பேராசிரியர் சந்திரசேகரன் ஆகியோருடன் அடிக்கடி தொடர்பில் இருந்தேன்.**

அக்காலத்தில் அடிக்கடி சந்திரசேகரன் 'சேர்' வீட்டுக்கு நான் போவதுண்டு. பேராசிரியர் அன்ரனி நோபேட், வழக்கறிஞரும் விரிவுரையாளருமான தமிழ்மாறன்ஆகியோர் அங்கு அடிக்கடி வரும் அவரது நண்பர்கள்.

தொண்ணூறுகளில் புலத்தின் தமிழ்க்கல்வி முறைக்கு வடிவமைத்த பெரியார்கள் சிவசோதி வரதராஜா, தாசீசியஸ் ஆகியோரின் அழைப்பில் சிவத்தம்பி அவர்களுடன் பேராசான் சந்திரசேகரனும் ஜெர்மனிக்குப் போயிருந்தார்.

புலம்பெயர் தமிழர்கள் சரியான தமிழ்ப் பாடத்திட்டம் ஒன்றை உருவாக்க முயன்றனர். புலத்தின் தமிழ்ப் பாலகரை தாய்நாட்டின் கலை, கலாசாரம், பண்பாடு சமூகம், தொல்லியல், இசை எனப் பல அம்சங்களையும் இணைக்கக் கூடிய கல்வித் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அந்த எண்ணம் நிறைவேற அறிவுக் கனதிமிக்க மதியுரைஞர் குழாம் ஒன்றின் அவசியம் அவர்களுக்குத் தேவைப்பட்டது.

பேராசிரியர்கள் சிவத்தம்பி, தமிழகத்திலிருந்து அறிஞர் அகத்தியலிங்கம், சுந்தரமூர்த்தி, தமிழிலிலக்கணத்திற்குப் பெயர் பெற்ற அறிஞரான செ. வை. சண்முகம், அறிஞர் காரை சுந்தரம்பிள்ளை, ஓவியர் மருது எனப் பலர் பலதுறைகளிலும் பாடக் கட்டுருவாக்கத்தில் ஈடுபட்டனர்.

சிவத்தம்பி சேர் அவர்கள் இந்தத் தமிழ்க் கல்வித் திட்டத்தின் மேற்பார்வை, ஒழுங்கமைப்புப் பணியில் ஈடுபட்டதால் இதனை அப்போது அறியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. பல்துறையில் விற்பன்னர்கள் சேர்ந்தாலும் அதனைக் கல்வி என்ற கட்டுக்குள் புகுத்தி அதாவது தமிழ்ச் சமூகத்தின் கலை, கலாசார பண்பாடு தொடர்பான எல்லா விடயங்களையும் ஒருங்கிணைத்து பாடத் திட்டத்தை உருவாக்கும் அந்த முக்கிய ஆலோசனைப் பணியில் ஈடுபட்டவர் அமரர் பேராசிரியர் சந்திரசேகரன்.

புலம்பெயர் தேசத்தின் தமிழ்க் கல்விக்கு அத்திவாரமிட்டார் என்பதற்கான நன்றிக்கும் மதிப்பிற்குமுரிய அறிஞர் பேராசிரியர் சோ சந்திரசேகரன் ஆவார்.



பேராசிரியர் சந்திரசேகரனுடன் கட்டுரையாளர்

ஜெர்மனியின் காட்டுப் பகுதி பங்களா ஒன்றில் ஒரு மாதகாலமாக தங்கியிருந்து அந்தப் பணியைப் புலம்பெயர் தமிழர் சந்ததிக்காக ஆற்றினார்.

ரூபவாஹினியில் நான் பணியாற்றிய காலம் முதற் கொண்டு அவருடன் நட்புடன் பழகினேன். நான் எந்தநேரமும் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் 'பந்தா' காட்டாமல் தமக்கு நேரமிருந்தால் வந்து பங்குபற்றும் பண்புடையவர் அவர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சக்தியின் நேரடி ஒளிபரப்பில் தேர்தல் முடிவுகளைப் பற்றி ஆராய தமிழக சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ. எஸ். பன்னீர்ச்செல்வனுடன் இவரையும் (நள்ளிரவு முழுக்க கலந்துரையாட) அழைத்திருந்தோம். எந்தத் தொகுதியின் அல்லது மாவட்டத்தின் முடிவு வந்தாலும் அந்த மாவட்டத்தினதும் தொகுதியினதும் சமூகப் பரம்பல், பின்னணி, அபிவிருத்தி வளர்ச்சி போன்ற விடயங்களை வைத்து தமது கருத்துகளை அவர் ஆழமாகத் தெரிவித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி ஒருமுறை சந்திரசேகரன் பற்றி சொன்னதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

"சந்திரசேகரன் தனியே ஒரு அக்கடமிக் அல்ல. அவர் ஒரு சிறந்த வாசகர். எதையும் வாசிப்பார். அதனால்தான் அவர் சமூகத்துக்குள்ளே வாழ்கிறார்."

இறுதி நாட்களில் 'மலையக மக்களின் அபிலாசைகள்' என்ற ஆவணத்தில் முக்கிய பங்கை ஆற்றினார். மலையக மக்களுக்கு மட்டுமன்று வடக்கு, கிழக்கு மக்களின் ஆவணத்துக்குக் கூட ஆலோசனை வழங்கும் தகைமை பெற்றவர் அவர் என்பதை அவரோடு நட்புறவாகப் பழகியோர் அறிவர்.

**எம்.வரதராஜன்...**
*( சுவிற்சர்லாந்து)*

# பாதிக்கப்பட்ட பண்டிட் மக்களின் குரலாக ஒலிக்கும் KASHMIR FILES திரைப்படம்

**காஷ்மீரிலிருந்து பண்டிட்டுகள் வெளியேற்றப்பட்டதை பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள 'த காஷ்மீர் ஃபைலஸ்' திரைப்படத்தை எடுத்த குழுவினரை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியிருந்தார்.**

இந்தப் படத்தை பிரபல இயக்குநர் விகேக் ரஞ்சன் அக்னிகோத்ரி இயக்கியுள்ளார். இவரது மனைவியும் நடிகையுமான பல்லவி ஜோஷி, அனுபம் கெர் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இயக்குநர், நடிகை பல்லவி ஜோஷி, தயாரிப்பாளர் அபிஷேக் ஆகியோர் பிரதமர் மோடியை சமீபத்தில் சந்தித்திருந்தனர். அப்போது அக்குழுவை பிரதமர் மோடி பாராட்டியிருந்தார்.

கடந்த 1990 இல் காஷ்மீரில் இருந்து இந்துக்களான பண்டிட்டுகள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். இந்தக் கதையை பின்னணியாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான திரையரங்குகளில் இப்படம் கடந்த மாதம் வெளியானது.

இருப்பினும் கடந்த மாத இறுதிவரை ரூ. 3.55 கோடி வசூல் சாதனை செய்ததாகவும், விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன. இதுவரை அழுத்தமாக பேசப்படாத காஷ்மீரின் மற்றுமொரு துயர பக்கத்தை 'தி காஷ்மீர் ஃபைலஸ்' அறிமுகம் செய்திருக்கிறது.

80களின் பிற்பகுதியில், 90களின் மத்தியில் காஷ்மீரில் நிகழ்ந்த கிளர்ச்சி, நிலையற்ற தன்மை ஆகியவற்றின் ஆவணமாக, காஷ்மீர் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பண்டிட்களின் குரலாக இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த இஸ்லாமியர்களையும் தீவிரவாதிகளாக சித்தரிப்பது எப்படி நியாயமற்றதோ, அதுபோலவே இந்துக்களான பண்டிட்களின் வாதங்களை கேட்க மறுப்பதும் நியாயமற்றதே என்பதை தீர்மானமாகச் சொல்கிறது இப்படம்.

'தி காஷ்மீர் ஃபைலஸ்' திரைப்படத்தில் பல்லவி ஜோஸி, அனுபம் கேர் ஆகியோருக்கு முக்கிய கதாபாத்திரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படத்தில் வெவ்வேறு சித்தாந்தங்களின் மீது நம்பிக்கை கொண்ட தனித்தனி குழுக்கள் காண்பிக்கப்படுகின்றன. பாகிஸ்தான் ஆதரவு காஷ்மீரிகள். இந்திய ஆதரவு காஷ்மீரிகள் அடுத்ததாக காஷ்மீரை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் என எழும் குரல்கள்.

இந்திய இராணுவ உடையில் வந்து இந்து பண்டிட்களை கொலை செய்யும் இஸ்லாமிய மதவாதிகளையும், மறுதரப்பில் தாக்குதல் நடத்தும் இராணுவத்தினரையும் கூட காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். இந்த சினிமா பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. இந்து பண்டிட்கள் கொலை செய்யப்படுவதைக் காட்டியிருப்பதே இந்த சர்சைகளுக்குக் காரணம். ஆனால் இயக்குநர் மிகத் தெளிவாக பல இடங்களில் விளக்கங்களைத் தருகிறார். சிவாவும் அப்துலும் நண்பர்கள். கிரிக்கெட் விளையாடும் காலம் தொட்டு நண்பர்களாக இருக்கும் அவர்களின் நட்பு குறித்த காட்சிகளும் கவனிக்கத்தக்கது.






**படக்குழுவினருக்கு பிரதமர் மோடி பாராட்டு**

பண்டிட் குடும்பங்கள் காஷ்மீர் கிளர்ச்சி காலத்தில் அங்கிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர் எனப் பதிவு செய்கிறது இத்திரைப்படம். Convert, Leave or die என்ற முழக்கம் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் பண்டிட்களுக்கு எதிராக வைக்கப்படுகிறது. காஷ்மீரில் இருந்து வெளியேற மறுக்கும் பண்டிட்கள் கொலை செய்யப்படுகின்றனர். இப்படியாக பல முனைகளில் நின்று பேச நினைத்திருக்கிறார் இயக்குநர்.

மதம், மதநம்பிக்கை, மதப் பயங்கரவாதம் என மூன்றாக பிரித்துக் கொள்வோம். எந்த மதத்தை பின்பற்றுகின்றவர்களாக இருந்தாலும் இந்த மூன்று வகைக்குள் அடக்கம். விளக்கிச் சொல்வதானால் மதத்தை பெயரளவில் தங்கள் அடையாளமாக வைத்துக் கொள்கிறவர்களால் ஆபத்தொன்றும் இல்லை. இரண்டாவது மதநம்பிக்கை கொண்டு தத்தமது மத வழிபாட்டு முறைகளை பின்பற்றுகிறவர்கள். இவர்களும் பிறமதத்தினரோடு இணக்கமாகவே போகின்றனர்.

மூன்றாவது மதத்தின் அடிப்படையிலான பயங்கரவாதம். காஷ்மீரில் ஒரு கையில் மதத்தையும், மறுகையில் துப்பாக்கியினையும் ஏந்தி நின்றவர்கள் மதத்தின் அடிப்பையிலான பயங்கரவாதிகள். இவர்களை மிகச் சரியாக புரிந்து கொண்டால் மதம் வேறு, பயங்கரவாதம் வேறு என நாம் புரிந்து கொள்ள முடியும்.

'தி காஷ்மீர் ஃபைலஸ்' உண்மையில் காஷ்மீரில் இவ்வளவு பேரிழப்புகள் ஏற்பட அண்டை நாடுகளின் ஆக்கிரமிப்பும், இராணுவத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் காரணம் என்கிறது. ஆனால் இயக்குநர் கொஞ்சம் புத்திசாலித்தனமாக இந்த வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்டவர்களை தனித்தனி குழுக்களாக காண்பித்திருக்கிறார். அதனால்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் "இப்படத்தில் வெவ்வேறு சித்தாந்தங்களின் மீது நம்பிக்கை கொண்ட தனித்தனி குழுக்கள் காண்பிக்கப்படுகின்றன" எனக் குறிப்பிட்டோம்.

இந்த உணர்திறனான சினிமா குறித்த விவாதங்களை முவைக்க வேண்டியது பார்வையார்களின் பொறுப்பு. இந்த சினிமாவை பார்க்கும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக புரிந்து கொள்ள முடிகிறது.

மதமும் தேசப்பற்றும் ஒரு நாடு இன்னொரு நிலத்தின் மீது ஆக்கிரமிக்க சொல்லிக் கொள்ளும் போலி சமாதானம் மட்டுமே என்பதை இந்த சினிமா சொல்கின்றது.

இப்படத்தின் மூலம் நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் காஷ்மீர் குழந்தைகள் குறித்ததானது. யுத்தம் மற்றும் எதிர்பாராத தாக்குதலால் மனதளவில் பாதிக்கப்பட்ட காஷ்மீர் குழந்தைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும். 'தி காஷ்மீர் ஃபைலஸ்' அவசியம் பார்த்து விவாதிக்க வேண்டிய சினிமா.

மதம், மதநம்பிக்கை, மதப்பயங்கரவாதம், இனப்படுகொலை,மக்கள் வெளியேற்றம், என்று தி காஷ்மீர் ஃபைலஸ் திரைப்படம் 11 மார்ச் 2022 அன்று வெளியான இந்தி மொழி திரைப்படமாகும். இத்திரைப்படத்தின் கதையை எழுதி, இயக்கிய விவேக் அக்னிஹோத்திரி மிக முக்கியமாக , அழுத்தமாக சொல்லிய விஷயம் Convert, Leave or die என்ற முழக்கம் இஸ்லாமியர்கள் பண்டிட்களுக்கு எதிராக வைக்கப்பட்டது ஆகும் . காஷ்மீரில் இருந்து வெளியேற மறுக்கும் பண்டிட்கள் கொலை செய்யப்படுகின்றனர். இந்த வரலாற்று சம்பவங்களை நண்பர்களுடன் விவாதம் செய்து, பல புத்தகங்களை படித்து புரட்டி போட இந்த படம் ஒரு பெஸ்ட் எக்ஸாம்பிள். குடும்பத்துடன் கண்டிப்பாக்க பார்க்க முடியாது. வயது வரம்பு மிக முக்கியம் . ஆனால் காஷ்மீர் ஃபைலஸ் பற்றி குறிப்பாக எதிர்கால இந்திய குழந்தைகள் ஒரு நாள் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்.

**ஒரு நாடு இன்னொரு நிலத்தின் மீது ஆக்கிரமிக்க சொல்லிக் கொள்ளும் போலி சமாதானமே 'மதமும் தேசப்பற்றும்' என்பதை வலியுறுத்தும் சினிமா**

# நற்பண்புள்ள சமூகத்தை உருவாக்குவதாயின் மாணவர் மத்தியில் விழுமியக் கல்வி அவசியம்

**ஒழுக்கமே ஒவ்வொருவரும் நன்னெறியுடன் வாழ வழிகாட்டுவதுடன், வாழ்விற்கு அர்த்தம் கற்பித்துத் தருவதாகவும் அமைந்துள்ளது. ஒருவர் சிறந்த ஒழுக்கத்துடன் வாழ்ந்து ஒரு விடயத்தில் ஒழுக்கத்தை தவற விட்டு விடுவாரானால் அதன் பின்னர் அவர் தனது உயிரையே பெரிதாகக் கருத மாட்டார். இதனையே 'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்பர். இதன் மூலம் ஒருவருடைய வாழ்வில் ஒழுக்கத்தின் இன்றியமையாமை குறித்து சிறப்புற விளங்கிக் கொள்ளலாம்.**

ஒழுக்கமும் அது சார்ந்த நன்னடத்தைகளும் விழுமியக் கல்வி மூலமே கட்டியெழுப்பப்படுகின்றன. விழுமியக் கல்வியானது கற்போரைப் பண்புள்ளவர்களாக மாற்றுவதற்கும், சான்றோரையும் சால்பு உள்ளோரையும் உருவாக்குவதற்காகவும் பயன்படுத்தப்படும் ஆற்றல் மிகு வழிமுறை எனலாம். கல்வி மூலமே எதிர்கால தலைமுறையினருக்கான விழுமியங்களை வழங்க முடியும்.

இன்றைய காலத்தைப் பொறுத்தவரையில் மக்களின் வாழ்க்கைப் பணிகள், பண்பாடுகள் நாளுக்கு நாள் மாற்றமடைந்து கொண்டு வருவதுடன், நவீனமயமாக்கல் என்ற போர்வையில் புதுப்புது பழக்கவழக்கங்களும் பண்பாடுகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. நகர்ப்புற வாழ்க்கை முறையிலேயே மக்களுடைய ஆர்வம் பரவலாக்கப்பட்டுள்ளதுடன் மனித நேயம், விழுமிய நடத்தைகள், பண்பாட்டு கலாசார அம்சங்கள் என்பன சீரழிந்து சமூகசீர்கேட்டிற்கு இட்டுச் சென்றுள்ளதையும் பரவலாக அவதானிக்கலாம்.

சமூக சீர்திருத்தவாதிகளால் இது குறித்த கருத்துகள், வழிகாட்டல்கள் அவ்வப்போது வழங்கப்பட்டாலும் கூட அதில் முன்னேற்றங்களைக் காண்பது வெறும் பகல் கனவாகவே உள்ளது. மக்களுடைய வாழ்க்கை முறைகள் மட்டுமன்றி விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறைகளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. நாகரிகம் எனும் பெயரில் கலாசாரம், வாழ்க்கை முறைகள் மாற்றப்பட்டுள்ளதுடன் இயந்திரமயமான வாழ்க்கை முறைக்கு மக்கள் தம்மை இசைவாக்கிக் கொண்டுள்ளனர்.

இத்தகைய விளைவு காரணமாக மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதிக்காமை, பணிவு, தன்னடக்கம், கருணை, உதவும் மனப்பாங்கு போன்ற விழுமியப் பண்புகள் சமூகத்திலிருந்து அற்றுப் போய் விட்டதுடன் மதுப் பாவனை, ஏமாற்றல், பொய், களவு, தவறான வழியில் இன்பத்தைத் தேடல் போன்ற இழிசெயற்பாடுகள் சமூகத்தில் பரவிக் காணப்படுகின்றன. விழுமியங்களிலே மக்களுக்கு இருந்த பற்று, ஈடுபாடு, நம்பிக்கைகள் குறைவடைந்துள்ளதுடன் வேலைப்பழு, நோய், வறுமை போன்றவற்றால் ஒழுக்கவிழுமியங்களை முறையாகப் பின்பற்றுவதில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விழுமியங்களை வழங்குவதற்கான முதற் களம் வீடாக இருப்பினும் கூட பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான விழுமியங்களை பூரணமாக வழங்க தவற விட்டுள்ளனர். மேற்கூறப்பட்ட குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட விழுமியக் கல்வி வழங்குதலே இன்றைய சமூகத்தின் இன்றியமையாத தேவையாக உள்ளது. முதலில் வீட்டிலிருந்தே அதற்கான ஆரம்ப அடித்தளம் இடப்பட வேண்டும். வீட்டில் இடம்பெறுகின்ற சமய, சம்பிரதாய நிகழ்வுகள் மற்றும் விழாக்களில் பிள்ளையை கலந்து கொள்ளச் செய்தல், பெற்றோரும், மூத்தோரும் நல்ல வார்த்தைகளையும், நன்நடத்தைகளையும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகச் செய்து காட்டல், குடும்பத்திலும் சக நண்பர்களுடனும் உதவி ஒத்துழைப்புடன் வாழல். நற்போதனைகள் வழங்குவதுடன் அவை நடைபெறும் இடங்களுக்கு அழைத்துச் செல்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் பிள்ளைகளுக்கு சிறந்த விழுமியத்தை போதிக்க முடியும்.



**பாடசாலைகளுக்கு மட்டுமன்றி, குடும்பச் சூழலுக்கும் பெரும் பங்கு**

வீட்டுச் சூழலிலிருந்து வெளிச்சூழலான பாடசாலைக்கு உட்புகும் பிள்ளைக்கு சிறந்த விழுமியங்கள் வழங்கப்பட பாடசாலை ஆளணியினர் பங்காற்றுதல் வேண்டும். பாடசாலைக் கலைத்திட்டத்திலும், இணைக்கலைத் திட்டத்திலும் விழுமியம்சார் பாடங்கள் இடம்பெற வேண்டும். காலை ஆராதனை நிகழ்ச்சிகள், சமய நிகழ்வுகள், பாரம்பரிய பண்பாட்டு கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதில் மாணவர்களை ஈடுபடச் செய்தல் வேண்டும். பிள்ளைகளின் சிறந்த நடத்தைகளுக்கான பாராட்டுக்கள், பரிசளிப்புக்கள் வழங்குவதன் மூலமும் அவர்களை ஊக்குவிக்கலாம். சான்றோரின் வாழ்க்கை வரலாறுகளைக் கற்று அதன் மூலம் படிப்பினைகள் பெற மாணவரைத் தூண்ட வேண்டும்.

ஒவ்வொரு சமயமும் சிறந்த ஒழுக்க விடயங்களைப் போதிப்பதில் வதிவிலக்கல்ல. அதனடிப்படையில் ஒவ்வொருவரும் தத்தமது சமய புனித நூல்களை கற்கவும், மதத் தலைவர்களால் வழங்கப்படும் சமய போதனைகளில் கலந்து கொள்ளச் செய்யவும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதுமட்டுமன்றி இலத்திரனியல் சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் நன்னெறி நிகழ்ச்சிகள் மூலமும் பிள்ளைகளின் செயற்பாடுகளை நல்வழியின்பால் திசை திருப்ப முடியும். தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் சில படங்களும் தத்துவரீதியான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இன்றைய நிலையில் விழுமியங்களை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் குறைவு என்றே கூறலாம். எவ்வாறிருப்பினும் பாடசாலைகளை மட்டும் இதில் குறை கூறி விட முடியாது. விழுமியங்களை வழங்குவதில் குடும்பச் சூழலிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய குறைபாடுகள் அகற்றப்பட்டு வளர்ந்து வரும் இளம் சமூகத்தினருக்கான முறையான விழுமியங்கள் போதிக்கப்படும் போதே எதிர்கால சந்ததியினரை ஒழுக்கமிக்க சமூகத்தினராக மாற்றியமைக்க முடியும். இதற்கென அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

**ஐ.எப்.றிம்ஸியா...**
*(3ஆம் வருடம்)* கல்வியியல் சிறப்புக் கற்கை, கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

## நிதி அமைச்சை ஏற்குமாறு சஜித்,...

தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர், நிதி அமைச்சர் பொறுப்பை 06 மாதங்கள் ஏற்று நாட்டு மக்களுக்கு தனது திறமையை காட்டுங்கள்.முழு ஒத்துழைப்பையும் தருகிறோம். இதே சவாலை அநுர குமாரவுக்கும் முன்வைக்கிறோம்.நிதி அமைச்சு பதவியை ஏற்கத் தயாரா? அதனை செய்யாது பொருளாதார திட்டமின்றி இளைஞர்களை குழப்பி வருகின்றனர் என்றார்.

## ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் ...

உறுப்பினர்கள் செயற்படாத காரணத்தினால் சபையை 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் முதலில் ஒத்திவைத்தார். மீண்டும் பாராளுமன்றம் ஆரம்பமான போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இதன் போது இரண்டாவது தடவையாக சபாநாயகர் பாராளுமன்றத்தை மீண்டும் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

## இலங்கைக்கு 2022 முதல்...

(03 ஆம் பக்கத் தொடர்)

திகழுமென அவர் கூறினார்.

இலங்கை முதலீட்டுச் சபை அறிமுகப்படுத்திய புதிய திட்டங்களினூடாக சுங்க அனுமதிக்கான கடதாசியற்ற ஏற்றுமதிஇறக்குமதி கடிதங்களை அறிமுகம் செய்தல் மற்றும் ஏற்றுமதி அங்கீகார கட்டணங்களை தானியங்கி முறை மூலம் செலுத்த முடியுமெனவும் இந்த சர்வதேச மட்டத்திலான முதலீட்டு வசதிகளை வழங்குவது இலங்கைக்கு புதிய முதலீடுகளை கவரக்கூடிய முக்கிய அம்சமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் புதிய முதலீட்டாளர்களுக்கு இலகுவாக பெறக்கூடிய அடிப்படை வசதிகளுடனான அபிவிருத்தி செய்யப்பட்ட இடங்கள் அறிந்து கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத் திட்டங்களின் கீழ் ஆடை அணிகள் மற்றும் மருந்து உற்பத்திகள், விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள், மின்சார மற்றும் எலக்ட்ரோனிக், இரும்பு மற்றும் கனரக தொழில்துறை போன்று தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவுகள் முக்கிய துறைகளாக அறிந்து கொள்ளப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## பிரதி சபாநாயகரின்...

(03 ஆம் பக்கத் தொடர்)

கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவதற்கும் அவர்கள் வகித்த பதவிகளை இராஜினாமா செய்வதற்கும் தீர்மானித்திருந்தனர்.

பாராளுமன்ற ஜனநாயகம் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். எனவே, பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகுவதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய சமர்ப்பித்த கடிதத்தை நிராகரிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கோட்டையிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் (05) ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனான கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி இவ்விடயத்தை தெரிவித்தார்.

இதன்படி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றக் குழுவின் சம்மதத்துடன், பிரதி சபாநாயகராக தாம் தொடர்ந்தும் செயற்படவுள்ளதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் அக்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கு ஒத்துழைப்பு...

(03 ஆம் பக்கத் தொடர்)

மார்ச் 05 முதல் 09 வரை இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்ததன் விளைவாக வர்த்தக அமைச்சர் குழுவின் விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை அமைச்சர் மட்ட வர்த்தகக் குழு, ஓமான் சுல்தானகத்துக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வாத், இலங்கை வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் யோகேந்திர பெரேரா இலங்கை வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். சோமசேன மஹதுல்வேவா, சினெக் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட ஆலோசகர், அட்மிரல் (ஓய்வு பெற்ற) திசர சமரசிங்க மற்றும் எஸ்.எல்.டி.சி.யின் இன் தலைவர் ரஞ்சித் ரூபசிங்க ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

அமைச்சர்களின் வர்த்தக பிரதிநிதிகள் குழு ஓமானின் பாரம்பரிய மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சேலம் பின் மொஹமட் அல் மஹ்ருகியை சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை ஆராய்ந்தனர். இரு நாடுகளிலும் சுற்றுலா நடத்துபவர்களுக்கு இடையே இணைப்புக்களை எளிதாக்குவதற்கு இரு தரப்பும் ஒப்புக்கொண்டன. இந்த சந்திப்பின் போது, தூதர் அமீர் அஜ்வாத், இரு நாடுகளின் சுற்றுலா அமைச்சகங்களுக்கிடையே கையெழுத்திடுவதற்காக தற்போது இறுதி செய்யப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையேயான சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஊக்கியாக அமையுமெனக் குறிப்பிட்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையிலான இலங்கை அமைச்சர்களின் வர்த்தகக் குழு, வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைக்கான துணைச் செயலாளர் கலாநிதி சலேஹ் ம்சான் தலைமையில் ஓமான் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பிரதிநிதிகளுடன் விரிவான இருதரப்பு கலந்துரையாடலை நடத்தியது.

வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு இரு நாடுகளிலும் உள்ள வாய்ப்புகள் தொடர்பான தகவல்களை இரு தரப்பினரும் பரிமாறிக் கொண்டனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பைத் தொடங்குவதற்கான சாத்தியமான துறைகளையும் அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

## இலங்கை உன்னிப்பாக...

(03 ஆம் பக்கத் தொடர்)

போராட்டங்களின் போது அமைதியை நிலைநாட்ட ஜனநாயக ரீதியாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவையாக அமைய வேண்டும் என்றும் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இந்த நெருக்கடி நிலைமையை தணிப்பதற்கான அரசாங்கத்தின் இயலுமை மீது இராணுவமயப்படுத்தப்பட்ட நகர்களில் ஏற்பட்ட சறுக்கல்கள் தாக்கம் செலுத்தியுள்ளன.

இந்த சூழ்நிலையில் அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் என்பன இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி இந்த பிரச்சினைகளுக்கு வினைத்திறனான தீர்வினை எட்ட முயற்சிக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

## இலங்கைக்கு கடத்த முயன்ற...

(03 ஆம் பக்கத் தொடர்)

தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு மஞ்சள், கடல் அட்டை போன்ற மருத்துவ குணம் கொண்ட பொருட்களும், கஞ்சா, அபின் போன்ற போதை பொருட்களும் கடத்தப்படும் சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருகிறது.

இதேபோல் செம்மரக் கட்டைகள், திமிங்கலம் வாயில் இருந்து உமிழக்கூடிய 'அம்பர்கிரீஸ்' என்ற பொருளும் கடத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து கடலோர காவல் படையினரும், உள்ளூர் பொலிசாரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு, மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு, கியூ பிரிவு பொலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற பொருட்களை பறிமுதல் செய்வதுடன் அதில் ஈடுபட்டவர்களையும் கைது செய்து வருகின்றனர்.

தூத்துக்குடியிலிருந்து படகு வழியாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து தூத்துக்குடியருகே உள்ள முள்ளக்காடு கடல் பகுதியில் புதன்கிழமை காலை திடீர் சோதனை மேற்கொண்டனர். இதன்போது, அங்கு வேகமாக சென்று கொண்டிருந்த படகிலிருந்த ஒருவர் கடலில் குதித்து தப்பி விட்டார். உடனடியாக மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் படகை மடக்கி சோதனையிட்டபோது அதில் 05 கிலோ எடை கொண்ட மேத்தாம் பேதமைன் என்ற உயர்ரக போதைப்பொருள் இருப்பது தெரிய வந்தது.

இதன் சர்வதேச மதிப்பு ரூபாய் 15 கோடி ஆகும் போதைப்பொருளை கைப்பற்றிய அதிகாரிகள் இது சம்பந்தமாக தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதையடுத்து படகை ஓட்டிவந்தவர் மற்றும் 02 பேர் அங்கிருந்து தப்பி சென்று விட்டனர். பின்னர் போதை பொருள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய பைபர் படகை தேசிய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர். அப்போது போதை பொருளை தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து வளைகுடா நாட்டுக்கு கடந்த திட்டமிடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

## பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக...

பாராளுமன்றத்தில் ஆராய்வதற்கு கட்சித் தலைவர் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது உக்கிரமடைய வாய்ப்புள்ளது. பொருளாதார நெருக்கடி,எரிபொருள் தட்டுப்பாடு, கேஸ் மற்றும் மின்சார நெருக்கடி என்பவற்றுக்கு மேலதிகமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது, நாட்டில் இன்று பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அதனைத் தீர்ப்பதற்கு எல்லோரும் கட்சி பேதமின்றி செயற்படவேண்டியது அவசியம் என்றார்.

யார் தவறு செய்தார் என்பதை விட என்ன செய்ய வேண்டும் என்பதைத ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டும். கூட்டாக இணைந்து முடிவு எடுக்க வேண்டும். ஜனநாயக சூழலில் இந்த ப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். நாம் தவறினால் அது பாராளுமன்ற ஜனநாயகத்தின் தோல்வியாகும். அப்பாவி மக்களின் உயிர்களில் இது நிறைவடையலாம். அவ்வாறான அனுபவம் எனது அரசியல் வாழ்வில் கண்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பல அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகளை பாதுகாப்பவர் என்ற வகையில் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனநாயக ரீதியில் தீர்வு காண முடியும் என தெரிவித்த சபாநாயகர், இந்த வார இறுதிக்குள் அரசியலமைப்பின் பிரகாரம் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கான பொதுவான திட்டத்தை வகுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டார்.

## முன்மாதிரியாக செயற்படுவது...

என தெரிவித்த முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் , இவ்வாறானதொரு சூழ்நிலையில் சரியான தருணத்தில், சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாம் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை மீளப்பெற்றோம் என தெரிவித்தார்.

இதுவரை காலமும் அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவை நீக்கிக் கொள்வதற்காகவும், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவிருப்பதாகவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருந்ததுடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து விலகுவதாகவும் அறிவித்திருந்தார்.

இவ்விடயம் குறித்து தெளிவுப்படுத்தும் நோக்கில் நேற்றைய தினம் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுப்பட்டிருந்தோம்.அதனைதொடர்ந்துஇன்றைய தினம் (நேற்று) அரசாங்கத்திற்கு இதுவரை காலமும் வழங்க வந்த ஆதரவை நீக்கிக்கொள்வதற்கு தீர்மானித்ததுடன், எனது இராஜாங்க அமைச்சு பதவியையும் இராஜினாமா செய்துள்ளேன்.

இதனையடுத்து என்னை இழிவுப்படுத்தும் வகையிலான வதந்திகள் பரப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஆனால் உண்மையில் சரியான விடயத்தை செய்ய வேண்டும் என்பதற்காகவே இத்தீர்மானத்தை முன்னெடுத்தோம். அதற்கு மேலாக அண்மைய காலங்களில் நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.எனவே அவ்வாறு இருக்கையில் இளம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நான் ஒரு சிறந்த முன்மாதிரியாக செயற்பட வேண்டியது அவசியமானது. எனவே கடினமான தருணங்களிலும்,நெருக்கடிகளின் போதும் நாம் சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

## நாட்டின் நிதி நெருக்கடிக்கு அரசு...

தெரிவித்தார். அதேபோன்று நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்டதல்ல. தொடர்ந்து நாட்டை ஆண்டு வந்த அரசாங்கங்கள் அனைத்தும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

1978 முதல் ஆரம்பமான இந்த நெருக்கடி 2015 ஆம் ஆண்டு உக்கிரமடைந்தது. நாடு சுமக்க முடியாத அளவில் கடன்களை கடந்த அரசாங்கம் பெற்றுக் கொண்டதன் விளைவையே இன்று அனுபவிக்க நேர்ந்துள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

அரசியலமைப்பின் 45 ஆவது சரத்துக்கிணங்க நிதி தொடர்பான பொறுப்பு பாராளுமன்றத்திற்கே உரியது. அதன்படி ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் அதற்கான பொறுப்புள்ளது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் கடன் பெற்றுக் கொள்ளாத எந்த அரசாங்கமும் கிடையாது. வரவுக்கு மேல் செலவு என்ற நிலையே தொடர்கிறது. கடனைப் பெற்றுக் கொண்டு அதற்கான வட்டியுடன் முதலும் செலுத்த நேரிட்டுள்ளது.

எமது ஏற்றுமதி வருமானம் 10 பில்லியனாக உள்ளபோது இறக்குமதிக்கான செலவு 22 பில்லியனாக உள்ளது. தற்போது நாட்டில் இடம்பெறுவது அரசியல் நெருக்கடியல்ல. தொழில்நுட்ப நெருக்கடியே. நிதி முகாமைத்துவம் அவசியமாகிறது. அதற்கு தீர்வு காண்பதில் பாராளுமன்றம் முன்னின்று செயற்பட வேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதால் நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கோ பால்மா நெருக்கடிக்கோ தீர்வு கிடைக்காது. இது தேசிய நெருக்கடியாக கவனத்திற் கொள்ளப்பட்டு அனைவரும் இணைந்து இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## எந்தக் காரணத்துக்காகவும்...

சபையில் நேற்று கருத்து தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பில் குறிப்பிடுகையில், ஜனாதிபதி தமது பதவியை இராஜினாமா செய்தால் பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு முடியுமெனத் தெரிவித்தார். எனினும் சபாநாயகர் அதனை ஏன் சபையில் அறிவிக்கவில்லையென்றும் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் சபையில் உரையாற்றிய அமைச்சர் ஜோன்ஸ்டன்,

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்காக நேற்று முன்தினம் சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க 03 மணிக்கே கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

அவர் செல்லும்போது பாராளுமன்றத்துக்கருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினருடன் கலந்துரையாடினார். தலைக்கவசத்துடன் இருந்த ஒருவரை அவரது வாகனத்திலும் ஏற்றிச் சென்றார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனுரகுமார திஸாநாயக்கவுடன் ஒத்துழைப்புடன் கலந்துரையாடியதுடன் எங்கே ஜோனி என்று என்னைக் கேட்டனர்.

இது எனக்கு மட்டுமல்ல பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் அச்சுறுத்தல். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் கேட்டுக்கொண்டார்.

## தவக்கால சிந்தனை



### நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள்

ஆண்டவர் வழங்கிய வாக்குறுதிகள் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் உரிய விதத்தில் நிறைவேறியிருக்கின்றன.

அதேபோன்று புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் இயேசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எனினும் நாம் ஆண்டவருக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோமா என்பதை மீட்டுப் பார்ப்பதற்கான காலமாகவே இந்தத் தவக்காலம் அமைந்துள்ளது.

விசுவாசத்தின் தந்தை ஆபிரகாம் இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை இன்றைய பழைய ஏற்பாட்டு வாசகம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

"உன்னுடன் நான் செய்துகொண்ட உடன்படிக்கை இதுவே! எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தையாவாய். இனி உன் பெயர் ஆபிராமன்று ஆபிரகாம் என்ற பெயரால் அழைக்கப்படும். ஏனெனில் எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதை ஆக்குவேன்... தலைமுறை தலைமுறையாக உனக்குப் பின்வரும் உன் வழிமரபினர் வரை உடன்படிக்கையை நான் நிறைவேற்றுவேன்"என இறைவன் கூறுவது தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் என் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாக மாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்கிறார் இயேசு. யூதர்கள் அவரிடம் பல கேள்விகளை கேட்கின்றனர்." நீ ஆபிராமை கண்டிருக்கிறாயா உனக்கு இன்னும் 50 வயதுகூட ஆகவில்லையே" என கேள்வி எழுப்புகின்றனர். அதற்கு இயேசு,

ஆபிராம் பிறப்பதற்கு முன்பே நானிருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். என பதில் வழங்குகின்றார்.

நமது ஆண்டவர் நம்மோடு வாழ்பவர். மனிதர்களைப் போன்று வழங்கும் வாக்குறுதியை மறந்து அல்லது நிறைவேற்றாமல் இருப்பவரல்ல. அதனை முழுமனதுடன் நம்புவோம்.

இத் தவக்காலத்தில் அவரது உடன்படிக்கைக் கிணங்க செயற்படுவதற்கான அருள் வேண்டி செபிப்போம்.

எல்.செல்வா...

# தலைக்கவசத்துடன் அநுரவின் காரில் ஏறிய நபர் யார்?

## குற்றச்சாட்டுக்கு ஜே.வி.பி தலைவர் பதில்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்



பாராளுமன்றத்திற்கருகில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது தலைக்கவசத்துடன் தனது வாகத்தில் ஏறிய நபர் தொடர்பாக ஜே.வி.பி தலைவர் அநுர குமார திசாநாயக்க நேற்று சபையில் தெளிவுபடுத்தினார். தனது பாதுகாப்புக்காக வந்த நபரே அவ்வாறு வாகனத்தில் ஏறியதாக குறிப்பிட்ட அவர், பாதுகாப்பு தொடர்பில் முன்னெப்போதையும் விட அதிக அக்கறை கொண்டுள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கும் போது தனது வாகனத்தில் வெளிநபர் ஒருவர் நுழைந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், கட்சித் தலைவர் கூட்டத்தின் பின்னர் பாராளுமன்றத்துக்கு வெளியில் செல்லும் சந்தர்ப்பத்தில் எனது வாகனத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் மறித்தனர். கடந்த 10 , 15 வருடங்களுக்கு முன்னர் நான் கூறியதை தான் நீங்கள் இன்று கூறுகிறீர்கள் என நான் அவர்களிடம் கூறினேன்.

நாங்கள் எங்களது பாதுகாப்பை உறுதி செய்துள்ளோம். ஒவ்வொரு முறை நான் வாகனத்தில் செல்லும் போதும் எங்கள் கட்சித் தோழர்கள் பலர் சுற்றி இருந்து பாதுகாப்பு வழங்குகிறார்கள். பாராளுமன்றத்தை விட்டு வெளியேறும் முன் நான் வெளியே வருவதாக சகோதரர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் பாதுகாப்புக்கு வந்தனர். ஒரு சில மோட்டார் சைக்கிள்கள் எனது பாதுகாப்புக்கு வந்தன. தலைகவசத்துடன் ஒருவர் வந்து காரில் ஏறினார். அவர் எனது பாதுகாவலர். மழை காரணமாக அவர் தலைக்கவசத்துடன் எனது காரில் ஏறினாரென்றும் அவர் குறிப்பிட்டார்.(பா)

# ஒரு வருடத்துக்கு எம்.பி சம்பளம், சாப்பாடு வேண்டாம்

## ஹரீன் எம்.பி அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

இந்த நெருக்கடி நிலையில் ஒரு வருடத்துக்கு தனது எம்.பி சம்பளம் வேண்டாமென்றும் பாராளுமன்றத்தினால் வழங்கும் உணவு தேவையில்லையென்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்ப இருப்பதாக தெரிவித்த அவர் பிரச்சினைக்கு தீர்வு காண பல மாற்றுவழிகளுள்ளன. மக்கள் கஷ்டப்படுகையில் எமக்கு இரண்டரை இலட்சத்தினால் பயனில்லை. எமது பதவிகளை பாராது மக்களுடன் இணைந்து கஷ்டப்பட முடியுமாக இருந்தால் கிராமத்திற்கு செல்லமுடியும். அனைவருக்கும் பொறுப்பு உள்ளது.

## தங்கத்தின் விலை...

அதேநேரம், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று, 175, 000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த வாரத்தில் 24 கரட் தங்கம், பவுண் ஒன்று 200,000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டொலர் பிரச்சினைக்கு...

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றை இந்நாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தால் நாட்டில் எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது என அவர் குறிப்பிட்டார்.

## அவசரகாலச் சட்டம்...

ஜனாதிபதியினால் அவசர காலச் சட்டம் பிரகடனப்படுத் தப்பட்டிருந்தது. அதனை நீக்கும் வகையில் ஜனாதிபதியினால் நேற்று இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

## ஆட்சியை கைப்பற்ற...

விடுத்தார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், ஆர்ப்பாட்டம் செய்பவர்களிடம் நான் அன்பாக கோருவது என்னவென்றால், நீங்களும் நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள். உங்களை பலிகொடுத்து ஆட்சிக்கு வர சில கட்சிகள் காத்திருக்கின்றன. குப்பை அரசியல் குறித்து தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் போராட்டத்தில் அரசியல் கட்சிகள் ஊடுருவலாம். ஜனநாய ரீதியில் பாராளுமன்றத்திற்கு வாருங்கள் என்றார்.

## பாடசாலைகளுக்கு இன்று முதல்...

முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இம்மாதம் 18 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் எனவும் கல்விமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் பாடசாலை நேரத்தை எதிர்வரும் தவணையிலிருந்து ஒரு மணி நேரத்தால் நீடிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த ஆண்டுடன் தொடர்புடைய பாடத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு 139 நாட்கள் வரை யறுக்கப்பட்ட கால அவகாசம் காணப்படுவதால், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை நேரத்தை ஒரு மணி நேரம் வரை நீட்டிப்பதன் மூலம் கற்பித்தலுக்கான காலத்தை கூடுதலாக வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. கால அவகாசம் நீட்டிக்கப்பட்ட பின்னரும் பாடத்திட்டத்தை உள்ளடக்க முடியாத பட்சத்தில், மூன்றாம் தவணையின் போது, சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துவது தொடர்பிலும் கல்வியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

## புதுவருட காலத்தில் மிக கவனம்...

புத்தாண்டு காலத்தில் இடம்பெறும் முக்கிய செயற்பாடுகளின் போது, பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

## TPAயின் ஒத்திவைத்த ...

ஈடுபட வேண்டுமென தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## பகிரங்க ஏல விற்பனை

சொ.∴பட்லொஜிக் ∴பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, உரிய காலத்தில் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல. 85, கொலன்னாவை வீதி, தெமட்டகொடை, கொழும்பு 09,** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **ஏப்ரல் 28, 2022 காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

### எமது தங்கக் கடன் நிலையங்கள்

- பொரளை
- தெமட்டகொடை
- காலி
- கம்பஹா
- கிராண்பாஸ்
- கடவத்தை
- களுத்துறை
- கொச்சிக்கடை
- கொட்டாஞ்சேனை
- கொட்டாவ
- மாத்தறை
- நீர்கொழும்பு
- திஸ்ஸமஹாராம
- இரத்தினபுரி
- வெளிகம
- வத்தளை
- ஹெட்டன்
- கண்டி
- பதுளை
- மாவனெள்ள
- சிலாபம்
- குருநாகல
- அனுராதபுரம்
- சுன்னாகம்
- தம்புள்ள
- எம்பிலிபிட்டிய
- யாழ்ப்பாணம்
- மாத்தளை
- நுவரெலிய
- பொலன்னறுவை
- பம்பலபிட்டிய

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

சீட்டிலுக்கப்பட்ட திகதி 05.04.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**

சீட்டிழுப்பு இலக்கம்: 4726
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,406,160.00
அச்சிடப்பட்ட திகதி 03.04.2022
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 4 7 4 6 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 19,880,230.00

**ராசி சுப பலன்** Handahana

சீட்டிழுப்பு இலக்கம்: 0038
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,348,320.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 04.04.2022
இலக்கினம் மிதுனம் வெற்றி இலக்கங்கள் 01 09 25 49
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,651,205.00

**தன நிதானய**

டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /04 /05
சீட்டிழுப்பு இலக்கம் : 758
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,868,640.00
வெற்றி இலக்கினம் K வெற்றி இலக்கங்கள் 09 25 44 78
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,390,281.60

**கோடி 23+ Mega POWER மெகா பவர்**

சீட்டிழுப்பு இலக்கம் 1075
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022.04.04
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,691,880.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 246,367,726.00
ஆங்கில எழுத்து G சுப்பர் நம்பர் 05 வெற்றி எண்கள் 36 37 65 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : infor@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## பெருந்தோட்ட அமைச்சு
## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
# இறப்பர் மரம் விற்பனை
## வலஹந்துவ தோட்டம் காலி

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் காலி மாவட்டத்தில் அமைந்துள்ள வலஹந்துவ தோட்டத்தின் மேல் பகுதியில் 107 இறப்பர் மரங்களை கேள்வியின் மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் அடங்கிய கேள்வி ஆவணங்களை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் அல்லது வலஹந்துவ தோட்டத்திலிருந்து 2022.04.11ம் திகதி முதல் ரூ. 2,000/- தொகையை, காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். 2022.04.29 பி.ப. 2.00 இற்கு இ.அ.பெ.கூ தலைமையகத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் 2022.04.29 பி.ப. 2.00 இற்கு முன் சகல கேள்விப் பத்திரங்களையும் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி, கொழும்பு-12.**
**திகதி: 2022.04.05**
**தொ.பே. இல. :- 011-5921463**
**091-5634900**

# INVITATION FOR BIDS

## PROVINCIAL IRRIGATION DEPARTMENT
## EASTERN PROVINCE

***CLIMATE SMART IRRIGATED AGRICULTURE PROJECT (CSIAP) - 2022***

## OFFICE OF THE PROVINCIAL DIRECTOR OF IRRIGATION EASTERN PROVINCE

## OBTAINING VEHICLES ON RENTAL BASIS

1. The Chairman, Department Procurement Committee on behalf of the Provincial Irrigation Department, Eastern Province invites sealed bids from qualified and eligible bidders for obtaining vehicles on rental basis described in the table below.
2. Interested bidders may obtain further information from Provincial Director of Irrigation, Eastern Province, Batticaloa. (TP No.065-2229104, Fax No. 065-2229105) and inspect the bidding documents at the same place on working days from **09.00 hrs to 16.00 hrs.**
3. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on submission of a written application to Provincial Director of Irrigation, Eastern Province, Murukan Kovil Road, Thiraimadu, Batticaloa (065-2229104) from **07.04.2022 until 25.04.2022** from **09.00 hrs to 15.00 hrs**. upon payment of non-refundable fee of Rs 1,500.00 for each set of Bidding documents. The method of payment should be by cash.
4. Bids must be delivered to Chairman, Department Procurement Committee, Provincial Irrigation Department, Eastern Province, Murukan Kovil Road, Thiraimadu, Batticaloa at or before **11.00 a.m. on 27.04.2022**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.
5. Bid validity periods are given in the table below.
6. All bids shall be accompanied by a Bid Security in the form of Bid Security in Section VII. The amount and validity of bid security shall be as per the information given in the table below.

| Description of work / Bid No. | Office to be Attached | Duration of Rental Period | Type of Vehicle required for rent | Minimum kilometers expected to be used in a month | Bid Validity Period up to | Required Bid Security | | Condition of Vehicle |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs) | Validity | |
| **1.** Hiring of a Double Cab for Inspection works of Ampara schemes and to attend meetings in other Districts **(CSIAP/EP/NCB/Double Cabs. Hire.A.2022)** | Office of the Deputy Director of Irrigation, Yard Road, Kalmunai. | **8** months | One 4WD Double Cab with driver and fuel | 3000 km | 15.06.2022 | 30,000.00 | 13.07.2022 | Should be registered within **12 years** from the date of bid opening |
| **2.** Hiring of a Double Cab for Inspection works of Batticaloa schemes and to attend meetings in other Districts **(CSIAP/EP/NCB/Double Cabs. Hire.B.2022)** | Office of the Deputy Director of Irrigation, Yard Road, Batticaloa. | **8** months | One 4WD Double Cab with driver and fuel | 3000 km | 15.06.2022 | 30,000.00 | 13.07.2022 | Should be registered within **12 years** from the date of bid opening |
| **3.** Hiring of a Double Cab for Inspection works of Trincomalee schemes and to attend meetings in other Districts **(CSIAP/EP/NCB/Double Cabs. Hire.T.2022)** | Office of the Deputy Director of Irrigation, Central Road, Orr's Hill, Trincomalee | **8** months | One 4WD Double Cab with driver and fuel | 3000 km | 15.06.2022 | 30,000.00 | 13.07.2022 | Should be registered within **12 years** from the date of bid opening |

**Eng. S. Ganeshalingam**
**Chairman, Department Procurement Committee.**
**Provincial Director of Irrigation,**
**Eastern Province.**
07.04.2022

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/13/052 | MS Plates LR ' A' 6000 X 1500 (10MM – 10 Nos & 6MM – 10 Nos ) | 60,000.00 | 1,000.00 | 28-04-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஏப்ரல் 08ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்** : **2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல.** : **2381652, 2470443**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு

# ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம் (IWWRMP)
# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் (EOI)

## EOI சமர்ப்பிப்பதற்கான காலஎல்லை நீட்டிப்பு

1. வளவை வலது கரை பிரதான கால்வாயின் 3+950 கி.மீ. முதல் 4+330 கி.மீ. தூரம் வரை பரீட்சித்தல், குறைபாடுகளை கண்டறிதல் மற்றும் SIPHON திருத்தவேலைகளுக்கான ஆலோசனை சேவை

   ஒப்பந்த இலக்கம் : **LK-MOMDE-138826-CS-CQS**

2. வளவை வலது கரை பிரதான கால்வாயின் **4+000** கி.மீ. தூரத்தில் பாலத்தை வடிவமைப்பதற்கான ஆலோசனை சேவை

   ஒப்பந்த இலக்கம் : **LK-MOMDE-138827-CS-CQS**

மேலே குறிப்பிடப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்துதலின் தொடர்ச்சியாக, இரண்டு தொகுப்புகளுக்குமான காலஎல்லை 21 ஏப்ரல் 2022 திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களைப் பார்க்கும் போது, சமர்ப்பிப்பதற்கான காலஎல்லை 7 ஏப்ரல் 2022 திகதி அல்ல, 21 ஏப்ரல் 2022 திகதி காலை 10.30 மணி வரை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

| ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான ஆரம்ப காலஎல்லை | ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான புதிய காலஎல்லை |
|---|---|
| **7** ஏப்ரல் 2022 | **21** ஏப்ரல் 2022 |

ஏற்கனவே தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்திய விண்ணப்பதாரர்கள், அவர்கள் விரும்பும் பட்சத்தில், அவர்களுடைய புதிய ஆர்வத்தை "புதுப்பிக்கப்பட்ட சமர்ப்பிப்பு" என்று குறிப்பிட்டு மீள சமர்ப்பிக்கலாம் (மூடிய உறையில்).

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**2 வது மாடி, மகாவலி நிலையம்,**
**இல. 96, ஆனந்த குமாரசாமி மாவத்தை,**
**கொழும்பு 07, இலங்கை.**
**தொலைபேசி : + 94-112691163**
**தொலைநகல் : + 94-112691163**
**மின்னஞ்சல் : iwwrmp@sltnet.lk**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
BOC
Lake House Branch
Acc. No. 000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

# கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் 10ஆம் திகதி ஞாயிறன்று ஸ்ரீராமநவமி விழா



சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகத்தின்கீழ் இயங்கும் கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் இம்மாதம் 10 ஆம் திகதி ஞாயிறன்று ஸ்ரீராமநவமி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

தர்மங்களை நடைமுறையில் காட்ட தர்மத்தின் நாயகன் பகவான் கிருஷ்ணர் ஸ்ரீராமபிரானாக மனிதவடிவில் அவதரித்த புனித தினமே ஸ்ரீராமநவமி விழாவென்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீராமநவமி தினமான ஞாயிறன்று விஷேட ஆராதனைகளும், மாலை 6.00 மணிக்கு தூப ஆராத்தியும் தொடர்ந்து மங்கள வாத்தியமும், தியாகராஜபிரஹ்ம பஞ்சரத்ன கீர்த்தனைகள் இசை வல்லுனர்களால் பாடப்பட்டு ஸ்ரீராமபிரானுக்கான ஆராதனையும், ஊஞ்சல் ஆட்டும் வைபவமும் இடம்பெறும்.

விஷேட அம்சமாக இந்தியாவிலிருந்து திருமல கோவிந்ததாஸ் பிரபு அவர்களின் இராமாயணம் பற்றிய விஷேட உரை இடம்பெற்று பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

# இளவயது திருமணம், குழந்தைகள் கர்ப்பமடைதலை தடுக்க வீதி நிகழ்வுகள்

(திறப்பனை தினகரன் நிருபர்)

சமூக, பொருளாதார, கலாசார மற்றும் தவறான புரிதல்களே சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு பிரதான காரணமென,அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

இவற்றிலிருந்து விடுபடவும்,இது தொடர்பில் விழிப்பூட்டவும் வீதி நாடகங்களையும் இந்தப் பணியகம் ஏற்பாடு செய்திருந்தது. குழந்தைகள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வரும் நிலையிலே இவ்வாறு வீதி நாடகங்களூடாக விழிப்புணர்வூட்டப்பட்டன.

குழந்தைகளின் மனநிலை உட்பட பல்வேறு காரணங்களாலே, கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வருகிறது. இந் நிலையிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்து சிறுவர்களுக்கான சுமுகமான சமூகச் சூழலை உருவாக்கும் திட்டங்களையும்

அநுராதபுரம் மாவட்ட சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்

ஏற்பாடு செய்துள்ளது. இது தொடர்பில்,75 க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் திரையிடப்பட்டுள்ளன.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் வழிகாட்டலின் கீழ், பெண்கள், சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளிகள், ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. எம். தி. டி. ஜயசேகர ஆகியோரின் மேற்பார்வையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வீதி நாடக நிகழ்ச்சி, ஹொரவ்பொத்தானை பிரதேச செயலக வளாகத்திலிருந்து ஆரம்பமாகி கெப்பித்திகொல்லாவ மகா வித்தியாலயத்தில் நிறைவடைந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தைப் பாராட்டிய அநுராதபுரம் மாவட்டச் செயலாளர், அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் உள்ளடக்கும் வகையில், இந்த வீதி நாடக நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற வேண்டும். அதற்கேற்ப விஷேட வேலைத் திட்டமொன்றை உத்தியோகத்தர்கள் முன்னெடுப்பது முக்கியமானது எனத் தெரிவித்தார்.

இளவயது திருமணம் மற்றும் முன்கூட்டிய கர்ப்பத்தைத் தடுப்பது பற்றிய அறிவையும் புரிதலையும் மேம்படுத்தல், குழந்தைகளை இந்தப் பேரழிவிலிருந்து காப்பாற்றுதல், குழந்தைகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை நீக்குதல் மற்றும் வாழ்க்கையின் அழகியலைப் புரிந்து கொள்வது

உள்ளிட்ட நோக்கங்களுக்கே இத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

# வாழைச்சேனை அந்நூர் தேசிய விளையாட்டு மைதானம் புனரமைப்பு

(கல்குடா தினகரன் நிருபர்)

விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக நாடளாவிய ரீதியில் கிராமிய விளையாட்டு மைதானம் மற்றும் பாடசாலை விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகி உள்ளன.

இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான நசீர் அஹமட்டின் முயற்சியில் வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தை புனரமைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை அதிபர் ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ருவைத், பிரதேச சபை உறுப்பினர்களான எம்.பி.எம்.தையூப், எம்.இம்தியாஸ், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எம். ஜவாத், பாடசாலை பிரதி அதிபர்கள், பாடசாலை சமூக மட்ட அமைப்புக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டுத்துறை அமைச்சின் இரண்டு மில்லியன் ரூபா நிதியின் கீழ், பாடசாலை விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தெரிவித்தார்.


## பொருட் கொள்வனவு அறிவித்தல்
## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-51

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைகுழுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார். தெரிவு செய்யப்படும் விநியோகத்தர்கள், கொள்வனவு கட்டளை கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் விநியோகத்தினை மேற்கொள்ளல் வேண்டும்.

Bond Paper - 60gsm ± 2.5%

1. *Item* - Pink - 17"- 75MT ± 10%
2. *Item* - Yellow - 17"- 50MT ± 10%
3. *Item* - Blue - 17"- 75MT ± 10%
4. *Item* - Green - 17"- 50MT ± 10%
5. *Item* - Pink - 21"- 25MT ± 10%
6. *Item* - Blue - 21"- 25MT ± 10%
7. *Item* - Green - 17"- 25MT ± 10%

விலைமனு குறிப்பு இல.:- SCP06/BP/60/NCB22/2022-46
திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 12,500.00

8. *Item* - White Printing Paper - 20"x25"-70gsm ± 2.5% - 250MT±10%

விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/20x25/70/NCB23/2022-47
திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 7,500.00

9. *Item* - White Printing Paper - 30"x40"-100gsm ± 2.5% - 25MT±10%

விலைமனு குறிப்பு இல.:- SCP06/WPP/30x40/100/NCB24/2022-49
திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம்:- ரூபா 3,500.00

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம் 2022.04.28 ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்.

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள், கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**கொள்முதல் குழு**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**2022.04.07**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம்: www.documents.gov.lk**



## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## ரூ.45,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

10.25% 2025 "A" தொடர்களின் கீழ் ரூ. 25,000 மில்லியனையும் 11.25% 2027 "A" தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 ஏப்பிரல் 08ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

| தொடர்கள் | 10.25% 2025'A' | 11.25% 2027'A' |
|---|---|---|
| ISIN* | LKB01025C157 | LKB01027L154 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 25,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.25% ஆண்டொன்றிற்கு | 11.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2015 மார்ச் 15 | 2017 திசெம்பர் 15 |
| முதிர்வுத்திகதி | 2025 மார்ச் 15 | 2027 திசெம்பர் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மார்ச் & 15 செப்தெம்பர் | 15 யூன் & 15 திசெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 0.9470 | ரூ.100.00 இற்கு ரூ. 3.8324 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 ஏப்பிரல் 08, வெள்ளிக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப் படுவதற்கான இறுதித்திகதியும் நேரமும் | 2022 ஏப்பிரல் 08, வெள்ளிக்கிழமை, மு.ப. 11.00 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2022 ஏப்பிரல் 18 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/=) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/- பெருக்கங்களிலிருந்து) | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும் சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 | மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடெட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வ்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடெட் | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |
| என்எஸ்பீ பன்ட் | | | |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/ பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**



கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில்கள் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு

## கட்டிடங்கள் திணைக்களம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சிப் பாடசாலையின் தங்குமிட கட்டிட மீதி வேலைகளை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தல் - I ஆம் கட்டம்**
**[ஒப்பந்த இல.: 04-03-10-2022/CT36]**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் **107.0 மில்லியன்** ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ''களுத்துறையிலுள்ள பொலிஸ் பயிற்சி பாடசாலையின் தங்குமிட கட்டிட மீதி வேலைகளை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தல் - I ஆம் கட்டத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **கட்டிடங்கள் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர்** முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   நிர்மாணக்காலப்பகுதியானது **360 நாட்களாகும்.**
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் **சி-4 மற்றும் சி-3 தரத்தில்** கட்டிட நிர்மாணத்தில் பதிவு பெற்றவர்களாகவும் விலைமனுக்களை மூடும் திகதியன்றுவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். ''விலைமனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது (பிசிஏ-3) விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ 03 சான்றிதழானது சமர்ப்பிக்காவிடின் எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகை வழங்கப்பட மாட்டாது''.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **கொழும்பு-07, டொரிங்டன் அவென்யு, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்களம், பிரதான பொறியியலாளரிடமிருந்து (மேற்கு தெற்கு)** பெற்று அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

   தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2554691. தொலைநகல்: 011-2554690.
5. **2022.04.07 ஆம் திகதியிலிருந்து 2022.05.05 ஆம் திகதி வரையும்** மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக **இருபதாயிரம் ரூபாவைச் (20,000 ரூபா)** செலுத்திய பின்னர், கொழும்பு-07, டொரிங்டன் அவென்யு, 213 ஆம் இலக்கத்திலுள்ள கட்டிடங்கள் திணைக்களம், பிரதான பொறியியலாளருக்கு (மேற்கு தெற்கு) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, 'செத்சிரிபாய', பத்தரமுல்ல என்ற முகவரியில் 2022.05.06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில்** ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், பத்தரமுல்ல, 'செத்சிரிபாய', 2 ஆம் மாடி, கட்டிடங்கள் திணைக்களம், ஒப்பந்தக் கிளையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்ளும் இறுதி திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கும் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் பாங்கிலமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணத்தின் 09 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   - 1,500,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்.
   - 2022 செப்டம்பர் 01 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்.
   - விலைமனுக்கோரல் தரவின் **ITB 16.2 ஷரத்தில்** குறித்துரைக்கப்பட்ட முகவராண்மை யொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. பாதுகாப்பு சோதனை நிமித்தம் விலைமனுக்களை மூடும் உரிய நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னராகவே 'செத்சிரிபாய' வளாகத்தினுள் உட்பிரவேசிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**பொறியியலாளர் எம்.ஏச்.எம். இஸ்மயில்,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2 ஆம் மாடி, ''செத்சிரிபாய'',**
**பத்தரமுல்ல.**
**www.buildings.gov.lk**




களுத்துறை கல்வி வலயத்தின் பாணந்துறை கோட்டக் கல்விப் பிரிவின் அம்பலந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில், 2021 ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகள் பெற்று மாணவி எம்.எஸ்.எப்.ஹஸீபா சித்தியடைந்துள்ளார். பாடசாலை அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் மற்றும் வகுப்பாசிரியர் எம்.என்.எச்.நுஷா ஆகியோருடன் சித்தியடைந்த மாணவி காணப்படுகிறார்.

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)



இரத்மலானையில் அமைந்துள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைமை அலுவலக ஊழியர்கள், நேற்று (07) அரசாங்கத்தை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படம்.

படம்: பேருவளை விஷேட நிருபர்)

# ஜம்மு, காஷ்மீர் J K அரசு இயற்கை விவசாயத்திற்கு ஊக்கம்



ஜம்முகாஷ்மீர் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா செவ்வாய்கிழமை, யூனியன் பிர தே சத்தின் அரசாங்கம் இயற்கை ம ற்றும் இயற்கை விவசாயத்திற்கு உத்வேகம் அளித்து வருவதாகவும், உள்ளடக்கிய பகுதிகளின் அடிப்படையில் சாதனை அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். நிலையான முறையில் கரிம சான்றிதழின் கீழ் சின்ஹா *SKUAST*ஜம்முவில் இயற்கை விவசாய ம் குறித்த முதல் மண்டல மாநாட்டில் கலந்து கொண்டார்.

நேற்று நடந்த நிகழ்வில் பேசிய சின்ஹா, "ஜம்முகாஷ்மீர் இயற்கை மற்றும் இயற்கை விவசாயத்திற்கு பெரும் உத்வேகத்தை அளித்து வருகிறது, மேலும் நிலையான முறையில் கரிம சான்றிதழின் கீழ் உள்ள பகுதிகளின் அடிப்படையில் சாதனை அதிகரிப்பை பதிவு செய்துள்ளது" என்றார்.

சின்ஹா, தொழில்நுட்ப அடிப்படையிலான உதவியுடன் இயற்கை விவசாயம் செய்வது, உள்ளீட்டு செலவைக் குறைத்து, விரைவில் கிராமப்புற செழிப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

"விவசாயிகளுக்கு சிறந்த விலையை உணர நிதி உதவி, தொழில்நுட்பம் மற்றும் சந்தைப் படுத்தல் ஆதரவை விரிவுபடுத்துவதன் மூலம் நாங்கள் ஒரு வலுவான சுற்றுச்சூழல் அமைப்பை முறையாக உருவாக்கி வருகிறோம். நீண்ட காலத்திற்கு, தொழில்நுட்ப அடிப்படையிலான உதவியுடன் இயற்கை விவசாயம் இடுபொருள் செலவைக் குறைத்து, கிராமப்புற செழிப்பை ஏற்படுத்தும்," என்றார்.

காலநிலை மாற்றம் மற்றும் மண் சீரழிவு ஆகியவற்றால் ஏற்படும் சவால்களை இயற்கை மற்றும் இயற்கை விவசாயம் திறம்பட சமாளிக்க முடியும் என்று லெப்டினன்ட் கவர்னர் மேலும் கூறினார்.

"நாங்கள் சிறு மற்றும் குறு விவசாயிகளின் கவலைகளை நிவர்த்தி செய்கிறோம், மேலும் குறுகிய குழிகளுக்கு பதிலாக, விவசாயிகளுக்கு பண்ணை நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக விவசாயம் மற்றும் அதை சார்ந்த துறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன," என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், இயற்கை விவசாயம் உள்ளிட்ட பாரம்பரிய உள்நாட்டு நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனாவின் (பிகேவிஒய்) துணைத் திட்டமாக 2020 – 21ல் அறிமுகப்படுத்தப்பட்ட பாரதிய பிரகிருதிக் கிரிஷி பத்தியை (பிபிகேபி) மத்திய அரசு மார்ச் 29 அன்று செயல்படுத்துகிறது என்று தெரிவித்தது. உள்ளீட்டு செலவுகளை குறைக்கிறது.

# தேர்தல் மூலம் வர முடியாதவர்கள் வன்முறை மூலம் ஆட்சிக்கு வர முயற்சி



## முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

தேர்தல்கள் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் வன்முறை மூலம் அதனை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டு நிலைமை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வை பெற்றுக் கொள்வதற்காகவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டு இரண்டு நாள் விவாதம் நடத்தப்படுகிறது.

நாட்டு மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.நாட்டில் எரிபொருள், சமையல் எரிவாயு, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இத்தகைய பின்னணியிலேயே ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் ஜனாதிபதியின் வீட்டுக்கு சென்று அவரை கொலை செய்வதற்கு ஒரு கும்பல் முயற்சித்துள்ளது. மறுபுறம் அவரை வீட்டுக்கு அனுப்புவதற்கு சில சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

கடந்த காலத்தில் ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கும் ரணசிங்க பிரேமதாஸவுக்கும் எதிராக மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்தியபோது அவர்கள் பதவி விலகிப்போக வில்லை.

அன்று துண்டுப்பிரசுரங்களை விினியோகித்து மக்களை குழப்பகரமான சூழ்நிலைக்குத் தள்ளிய மக்கள் விடுதலை முன்னணியினர் இப்போது சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி அதனை மேற்கொள்ள பார்க்கின்றனர்.

அனைத்து குழப்பங்களின் பின்னணியிலும் அவர்கள் உள்ளனர்.

தேர்தல்கள் மூலம் ஆட்சிக்கு வர முடியாதவர்கள் வன்முறை மூலம் அதனை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**அநுர குமார திசாநாயக்க எம்.பி**

நான் தாக்குமாறு கூறவில்லை. திருடர்கள் தப்பிச் செல்வதை நிறுத்துமாறே கேட்டேன். 1983 கறுப்பு ஜூலையுடன் எமது கட்சிக்கு தொடர்பு இருக்காத நிலையில் எமது கட்சி தடை செய்யப்பட்டது. அதுபோன்ற நாடகத்தை மேடையேற்ற நினைத்தால் நடக்காது.மக்களின் குரலுக்கு செவிசாய்க்காததால் இந்த நிலை ஏற்பட்டது. ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடந்தாலும் அவர் எங்கிருக்கிறார் என்று தெரியாது. பாராளுமன்றத்தில் உள்ள தலைகளை வைத்து அதிகாரத்தை கணிப்பிட முடியாது. மக்களிடம் தான் அதிகாரம் உள்ளது. அமைச்சர்கள் விலகியும் விலகாத நிதி அமைச்சர் மக்களின் எதிர்ப்பால் அவர் விலகியுள்ளார்.என்மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் நிராகரிக்கிறோம்.

**அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ**

1988–89 காலத்தில் தலையில் துப்பாக்கி வைத்து கொன்ற குழுவை சேர்ந்தவர் ஜனாதிபதியாக கனவு காண்கிறார். எமக்கு எதிராக பொய் வழக்கு சோடிக்கப்பட்டன.அவற்றில் இருந்து விடுதலையானோம் 1971 கலவரத்தின் போது சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு ஜே.ஆர் ஒத்துழைப்பு வழங்கினார். வன்முறைகளுக்கு அஞ்சி முன்வைத்த காலை பின்நிற்க மாட்டோம். 225 எம்.பிகள் திருடர்கள் என்று கூறி மக்களை பாதைக்கு இழுக்க முயல்கின்றனர். நாம் அதற்கு அஞ்ச மாட்டோம்.

**ரோஹித்த அபேகுணவர்தன எம்.பி**

1983,1988 – 89 நிலை உருவாக்க முயற்சிக்கின்றனர். இரத்த வெறியில் உள்ளனர். தொடர்ந்து போராட்டம் நடத்துமாறு இளம் எம்.பி ஒருவர் கோரினார். செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்வோர் விஸ்கி குடிக்கின்றனர். பெறுமதியான வாகனத்தில் வந்திறங்குகின்றனர். கண்டியில் இருந்து கொழும்பிற்கு பாதயாத்திரை வந்தோம். ஆளும் தரப்பு அலுவலகங்கள் இருந்தன. அவற்றை தாக்கினோமா?

ஜனாதிபதிக்கு 5 வருடங்களுக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அவர் 5 வருடத்தின் பின்னர் தான் செல்வார். பாராளுமன்றத்தில் சுயாதீன குழுக்கள் உள்ளன. அவற்றை இணைத்து பாராளுமன்ற தேர்தலுக்கு நாம் தயார். புதிதாக உருவாகும் ஆட்சிக்கு எதிராக 6 மாதத்தில் மீண்டும் அலை உருவாகும். மீண்டும் மக்கள் அவர்களை வீட்டுக்கு செல்ல கூறுவர்.

**பியல் நிசாந்த எம்.பி**

எனது வீட்டின் மீது பலபிடிய பகுதியில் இருந்து வந்த குழுவினர் தாக்கமுற்பட்டனர். எமக்கு பதவி முக்கியமில்லை. இந்த குழப்ப நிலையை பயன்படுத்தி சிலர் அரசியல் செய்ய முயல்கின்றனர். மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். மாணவர்களின் வாழ்வு இருள்மயமாகியுள்ளது.

எனது வீட்டுக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் வருவதை ஊர் மக்கள் தடுத்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்பவர்களிடம் நான் அன்பாக கோருவது என்னவென்றால், நீங்களும் நாட்டின் மீது அன்பு கொண்வர்கள். உங்களை பலிகொடுத்து ஆட்சிக்கு வர சில கட்சிகள் காத்திருக்கின்றன. குப்பை அரசியல் குறித்து தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு தலைவர், திட்டம் கிடையாது. உங்கள் போராட்டத்தில் அரசியல் கட்சிகள் ஊடுருவலாம். ஜனநாயக ரீதியில் பாராளுமன்றத்திற்கு வாருங்கள்.

தவறுகளை திருத்தி நாட்டை கட்டியெழுப்ப முன்வருமாறு 225 பேருக்கும் அழைப்புவிடுக்கிறேன்.

**ரொசான் ரணசிங்க எம்.பி**

தேசிய மக்கள் சக்தி தலைவருக்கு நாட்டை மீட்கும் திட்டம் கிடையாது. தலைக்கவச குழுக்களே அநேக தாக்குதல் சம்பவங்களில் இருந்தன. அவரின் காரிலும் அத்தகைய ஒருவர் ஏறினார்.

நிதி அமைச்சர் பொறுப்பை 6 மாதங்கள் ஏற்று நாட்டு மக்களுக்கு தனது திறமையை காட்டுங்கள். முழு ஒத்துழைப்பையும் தருகிறோம். இதே சவாலை அநுர குமாரவுக்கும் முன்வைக்கிறோம். நிதி அமைச்சு பதவியை ஏற்கத் தயாரா? அதனை செய்யாது பொருளாதார திட்டமின்றி இளைஞர்களை குழப்பி வருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இளைஞர்களை குழப்பவில்லை. எனது வீட்டை தாக்க வந்த தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் பெயர்கள் என்னிடம் உள்ளன. தனது கட்சியினர் எவரும் தொடர்புபடவில்லை என அநுர மறுத்தார். ஆர்ப்பாட்டம் செய்ய அனைவருக்கும் உரிமை உள்ளது.

**ஹரீன் பெர்னாண்டோ எம்.பி (ஐ.ம.ச)**

அனைவரும் நேர்மையாக இணைந்து இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும். ஜனாதிபதி விலகினால் பாராளுமன்றத்தினால் ஒருவரை நியமிக்க முடியும்.

யாரும் ஏற்காவிடின் ஹர்ச டி சில்வாவுக்கு ஜனாதிபதி பதவியை வழங்குங்கள். 6 மாதங்களுக்கு கொடுங்கள். எமது கட்சித் தலைவர் ஆட்சியை ஏற்க மாட்டார்.

இந்த நெருக்கடி நிலையில் ஒரு வருடத்திற்கு எனக்கு எம்.பி சம்பளம் வேண்டாம். பாராளுமன்ற உணவு தேவையில்லை. இது தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்க கடிதம் வழங்க இருக்கிறேன். பல மாற்றுவழிகள் உள்ளன. மக்கள் கஷ்டப்படுகையில் எமக்கு இரண்டரை இலட்சத்தினால் பயனில்லை. எமது பதிவிகளை பாராது மக்களுடன் இணைந்து கஷ்டப்பட முடியுமாக இருந்தால் கிராமத்திற்கு செல்லமுடியும். அனைவருக்கும் பொறுப்பு உள்ளது. பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். உங்கள் தரப்பில் ஜனாதிபதி பொறுப்பிற்கு தகுதியானவர் இல்லாவிட்டால் ஹர்சவை நியமியுங்கள். தந்தை எம்.பி என்று செல்ல பிள்ளைகள் வெட்கப்படுகின்றனர். வீதிகள் ஆர்ப்பாட்டம் செய்வதால் பிரச்சினைக்கு தீர்வு வராது. நாட்டின் அரசியல் முறை மாற வேண்டும். அமைச்சரவையில் 50 வீதம் இளைஞர்களாக இருக்க வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கும் கட்சித் தலைவரின் யோசனையை வரவேற்கிறேன்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.**


நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை, பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியிலும் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கம் தமது கடமையிலிருந்து தவறியுள்ளது என்பதையே காட்டுகிறது.

மக்கள் வழங்கிய ஆணையை அவர்களே மீளப்பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கின்றார்கள் என்றால் அதன் மூலம் அரசாங்கத்தின் பொறுப்பற்ற நிலையே வெளிப்படுகிறது. தவறுகளை எதிர்க்கட்சி தொடர்ந்து சுட்டிக் காட்டி வருகிறது. எனினும் பெரும்பான்மை அரசாங்கம் என்பதால் எதையும் செய்யலாம் என்ற நிலையிலேயே அரசு செயல்பட்டு வருகிறது.

எவ்வாறெனினும் தற்போதைய நிலையை நாடு இதற்கு முன்னர் ஒருபோதும் சந்தித்ததில்லை.

அரசாங்கமும் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் மக்களின் எதிர்ப்பு கட்டுப்படுத்தப்படும். எதிர்க்கட்சியினரும் கூட தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. நாட்டின் வரலாற்றில் பெரும்பான்மை மக்களே அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுகின்றார்கள்.

நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கு இது சிறந்த காலமாகும். அவ்வாறு ஏற்பட்டால் அதற்கு தமிழ் மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளனர்.



சபை நிருபர்கள்:
லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

உணவு (சீனி மட்டங்களுக்கான நிறக் குறியீடு) ஒழுங்குவிதி 2016 - No 1965/18

உங்களுக்குத் தெரியுமா?




குடிபானங்களில் அடங்கியுள்ள சீனி மட்டங்கள் வர்ண சமிக்ஞைகளால் காண்பிக்கப்பட்டுள்ளன

சந்தையில் காணப்படும் சீனியுடன் கூடிய பல்வேறு குடிபானங்கள் மற்றும் குளிர்பான வகைகள் (கோலா, சக்திதரும் பான வகைகள், சீனி சேர்க்கப்பட்ட பழச்சாறு போன்றவற்றை) கொள்வனவு செய்யும்போது அவற்றின் லேபிள்களில் காணப்படும் நிறக் குறியீடுகள் பற்றிக் கவனம் செலுத்தவும்.


நீரிழிவுநோயின் அபாயத்தைத் தடுக்கும் சமிக்ஞைகள்

நீரிழிவு நோய்க்கு உங்களையும், உங்களின் அன்புக்குரியவர்களையும் பலியாக்காமலிருப்போம்

ChildFund Sri Lanka

உணவு மற்றும் குடிபானங்களின் லேபள்களை வாசிக்க மறக்க வேண்டாம்
விழிப்புணர்வு பெறுவோம், விழிப்புணர்வூட்டுவோம், செயற்படுத்துவோம்

# மலைச்சாரல்





வங்கிஓயா இலக்கம் 1 பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார். அந்தவகையில் சுரேஸ்குமார் சத்தியப்பிரியா தம்பதிகளின் புதல்வன் நிதர்சன் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

## கந்தப்பளை எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பதற்றம்

நுவரெலியா கந்தப்பளை நகரில் நேற்று பெரும் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

கந்தப்பளை நகரில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகிலேயே பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த ( 30) ஆம் திகதிக்கு பின் நேற்று (06) காலை வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டது.

சுமார் மூவாயிரம் லீற்றர் டீசல் இறக்கப்பட்டு அவை வழங்கப்பட்டது. இதன்போது அங்கு சுமார் 300ற்கும் அதிகமான வாகனங்கள் டீசலுக்காக காத்திருந்தன.

இருப்பினும் சுமார் ஐம்பதுக்கு உட்பட்ட வாகனங்களுக்கு டீசல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து டீசல் தீர்ந்து விட்டதாக நிலைய முகாமையாளர் தெரிவித்தார். இதனால் கோபமடைந்த



வாகன உரிமையாளர்கள், சாரதிகள் நிலைய முகாமையாளருடன் வாய் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது.

பதற்ற நிலைமையை கந்தப்பளை பொலிஸார் கட்டுக்குள் கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்டனர்.

யானை பசிக்கு சோல பொரி "என வழங்கப்படுவதை எதிர்ப்பதாகவும் தமது வாகனங்களுக்கான டீசல் வழங்க வேண்டும், இல்லையேல் இவ்விடத்தை விட்டு அகல போவதில்லை என கோஷமிட்டு இளைஞர்கள் பலர் கூட்டம் கூட்டமாக நின்று குரல் எழுப்பி வந்தனர்.

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இருவர் அங்குணுகொலபெலஸ்ஸை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

எனினும் வைத்தியர்களின் முயற்சி பலனளிக்காத நிலையில் இவர்கள் மரணித்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது. இவர்கள் இருவரும் 37 மற்றும் 40 வயதுகளையுடையவர்கள் எனவும் தெரியவருகின்றது. துப்பாக்கிச் சூட்டு சம்பவம் மற்றும் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் அங்குணுகொலபெலஸ்ஸ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காயமடைந்தவர்களை வாகனத்தில் அழைத்து வந்து வைத்தியசாலையில் அனுமதித்தவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன.

## பதுளை மாவட்ட உலமா சபை தலைவர் தெரிவு

**பதுளை தினகரன் நிருபர்**

பதுளை மாவட்ட உலமா சபையின் புதிய நிருவாகிகளுக்கான கூட்டம் பதுளை நகர் மஸ்ஜிதுல் அன்வர் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது புதிய தலைவராக அல்ஹாஜ் மௌலவி ஹிதாயத்துல்லாஹ் மஹ்மூத் (பஹ்மி) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹிதாயத்துல்லாஹ் மௌலவி முன்னாள் பதுளை பஹ்மிய்யா அரபுக் கல்லூரியின் அதிபரும், பதுளை மாவட்ட அஹதிய்யா பாடசாலை சம்மேளனத்தின் செயலாளரும், வெலிமடை நகரக்கிளை உலமா சபையின் தலைவருமாவார்.

பொதுச் செயலாளராக பதுளை நகரக் கிளை உலமா சபையின் செயலாளருமான அஷ் ஷேஹ் ஃபௌசுந் நிஸார் (ஸஹ்வி) பொருளாளராக சிட்டி உலமா சபையின் செயலாளரும், பதுளை பைத்துஸ் ஸகாத் அமைப்பின் பொருளாளருமான அஷ் ஷேஹ் என்.எம்.எம். ரூஃபில் (இஹ்ஸானி) ஆகியோர் தெரிவாகினர்.

உப தலைவர்கள் அஷ் ஷேஹ் முஹம்மத் யாஸிர், அஷ் ஷேஹ் முஹம்மத் ஹாலித் (ஹரபி)உதவி செயலாளர்கள், அஷ் ஷேஹ் எஸ். எச்.எம். ரஸ்ஸான் (பஹ்மி), நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக பதுளை மாவட்ட கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலதிக செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ஷேக் ஏ.ஆர்.எம். இஸ்ஹாக் (ஸஹ்ரி) அஷ் ஷேஹ் முஹம்மத் ஷேஹித்தீன் (மதனி) அஷ் ஷேஹ் முஹம்மத் ஸம்சுந் நஹார் (கபூரி) ஆகியோரும் தெரிவாகினர்.

அகில இலங்கை உலமா சபையின் உப தலைவரும், கண்டி ஃபுர்க்கானிய்யாவின் பணிப்பாளருமான அஷ் ஷேஹ் எச். உமர்தீன் (ரஹ்மானி) ஹசரத் அ.இ. உலமா சபையின் செயற்பாட்டாளர் அஷ் ஷேஹ் முஹம்மத் மற்றும் நீர்க்கொழும்புக் கிளை உலமா சபையின் உறுப்பினர்கள் முன்னிலையில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.



அரசாங்கத்திற்கு எதிராக நேற்று (06) கொட்டகலை வர்த்தக சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படம்.





ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை நேற்று 06.04.2022 பாடசாலை அதிபர் சித்தார்த்தன் ராஜன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
படம் ஹற்றன் விசேட நிருபர்

## மின்னல் தாக்கி நால்வர் பாதிப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஓல்ட்டன் தோட்டத்தில் மின்னல் தாக்கி நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

தோட்டத்தில் பணிபுரிந்துகொண்டிருந்த தொழிலாளர்களே நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மின்னல் தாக்கியமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் நான்கு பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு மின்னல் தாக்கத்துக்குள்ளானவர்கள் 27,35 வயதுகளையுடையவர்கள் என மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி எச். பண்டார கருத்து தெரிவிக்கையில் தற்போது மத்திய மலைநாட்டில் மாலை வேளையில் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்துவருகின்றது.

## இராகலையில் பொது சுகாதார பரிசோதகர்கள் சோதனை

இராகலை நகரம் நேற்று (06) காலை முதல் பொது சுகாதார பரிசோதகர்களின் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது.

இராகலை பொது சுகாதார பணிப்பாளர் வைத்தியர் எஸ்.கோபிராஜ் தலைமையிலான பொது பரிசோதக அதிகாரிகள் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது நகரில் ஹோட்டல்கள், பலசரக்கு கடைகள் மற்றும் சதொச, பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்கள் என பல இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தினர்.

## சாரதி பயிற்சி பாடசாலைகள் இடைநிறுத்தம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

எரிபொருள் தட்டுப்பாடு, விலை உயர்வு காரணமாக சாரதி பயிற்சி பாடசாலைகளை நடாத்திச் செல்வதற்கு முடியாத பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட சாரதி பயிற்சி நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு காரணமாக சாரதி பயிற்சி நிலையங்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலைமை நீடித்தால் எதிர்வரும் காலங்களில் சாரதி பயிற்சி பாடசாலைகளை நடாத்திச் செல்ல முடியாத நிலைமை உருவாகும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



அரசாங்கத்தின் விலைவாசி ஏற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மாலை (6ஆம் திகதி) தெஹியோவிட்ட கல்வி வலய ஆசிரியர்கள் நகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
படங்கள்: அவிசாவளை நிருபர்

## புரவுன்சீக் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டத்தில் 7 பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் சாமிமலை ஸ்ரஸ்ப்பி, ஓல்ட்டன், பெயர்லோன். கவரவில தோட்ட தொழிலாளர்கள் ஒன்று இணைந்து நேற்று காலை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். புரவுன்சீக் தோட்ட தொழிலாளர்கள் சாமிமலை வீதியில் வந்து மஸ்கெலியா எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



2500ற்கு மேற்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி, அரசாங்கத்தை உடன் பதவி துறக்க வேண்டும் வலியுறுத்தினர். தொழிலாளர்களுக்கு 1000/ வேதனம் தருவதாக கொடுத்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

நேற்று அன்றாட பொருட்களின்' விலை வான் அளவில் உயர்ந்துள்ளது. வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதவர்கள் பதவி துறக்க வேண்டும் என பதாகைகள் ஏந்திய வண்ணம் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். தொடர்ந்து ஊர்வலமாக சாமிமலை கவரவில்லை சந்தி வரை சென்று அங்கு எதிர்ப்பு ஊர்வலம் நிறைவடைந்தது.

# கிழக்கின் குரல்



# சேதனப்பசளை உற்பத்தியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு உபகரணங்கள் விநியோகம்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

நிலைபேறான சேதன விவசாய கலாசார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சேதனப்பசளை உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (06) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பயனாளிகளுக்கு, சேதனப்பசளை உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதற்காக நாலு மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், இரண்டு கட்டங்களாக இவ்வுபகரணங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாய சங்கங்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. இவை அனைத்தினதும் மொத்த பெறுமதி பதினொரு மில்லியனாகும். மொத்தமாக 27 பயனாளிகளுக்கு இவ்வுபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கட்டங்களில் வழங்கப்பட்ட இந்த உபகரணங்கள் மூலம் இதுவரை 2500 மெற்றிக்தொன் சேதனப்பசளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவை, விவசாயிகளுக்கு முறையாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட தர நியமங்களை பேணி இச்சேதனப்பசளை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சேதன விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் இந்த உபகரணங்கள், அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய பணிப்பாளர் கே.குகதாசன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ். பரமேஸ்வரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாஸன், உதவி பணிப்பாளர் (உரம்) எச்.ஜி.எஸ்.பிரேமரத்ன உட்பட இன்னும் பலரும் கலந்து கொண்டனர்.



# தேர்த் திருவிழா

(தம்பலகாமம் நிருபர்)

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய தேர்திருவிழா அண்மையில்,(03) வெகு விமர்சையாக நடைபெற்றது. பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும்,ஆலயத்திற்கு பக்தர்கள் சென்று வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

குறிப்பிட்டளவு அடியவர்கள் இதில், கலந்துகொண்டு இத்திருவிழாவினை சிறப்பித்தனர்.

திருக்கோணேஸ்வர பெருமான் மாதுமை அம்பாள், சமேதமாக தேரில் வலம் வரும் நிகழ்வும் இடம் பெற்றது.

# கோமரங்கடவெல பகுதியிலுள்ள யாய அணைக்கட்டு புனரமைப்பு

(கந்தளாய் தினகரன் நிருபர்)

திருகோணமலை கோமரங்கடவெல பகுதியில் அமைந்துள்ள திவுல்கஸ்வெவ அண்டிய யாய அணைக்கட்டை புனரமைக்கும் பணிகளை, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரல ஆரம்பித்துள்ளார்.

விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து விடுத்த கோரிக்கைக்கு அமைவாக, இந்த அணைக்கட்டு புனரமைக்கப்படவுள்ளது.

கோமரங்கடவெல பகுதியில், யாய குளத்து நீரைப் பயன்படுத்தி பெருமளவிலான விவசாய குடும்பங்கள் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளன. இதனால், பல குடும்பங்கள் நன்மையடைந்து வருவதுடன், இப்பகுதியில் சிறந்த விளைச்சலும் கிடைக்கிறது.

யாய அணைக்கட்டை புனரமைப்பதன் மூலம் திவுல்கஸ்யாய விவசாயிகள் இடையூறின்றி விவசாயச் செய்கையில் ஈடுபடவும், இக்குளத்திலான நீர்ப்பாசனம் உதவுகிறது.

# வறிய மக்களுக்கு உலருணவுப் பொதிகள்



(கிண்ணியா நிருபர்)

ரமழான் மாதத்தை முன்னிட்டு கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில், வறுமை கோட்டில் வாழும் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் நேற்று புதன்கிழமை (06) இப்பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், கிண்ணியா நகர சபை தவிசாளர் முஸ்தபா நிவாஸ் கலந்து கொண்டதுடன்,ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

"முஸ்லிம் ஹென்" நிறுவனத்தின் அனுசரணையுடன் இப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரமழான் மாதத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்

(பாலமுனை விஷேட நிருபர்)



றமழான் மாதத்தினை முன்னிட்டு அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கோப் பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தின் ஊடாக, பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

றமழான் பொதி வழங்கல் விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக, அத்தியாவசிய பொருட்களடங்கிய குறித்த பொதியினை வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (5) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி, அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் எம்.பி.ஏ.ஹமீட், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.சி.ஜலால்டீன், எஸ்.ஜாபீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பொதியினை வழங்கி வைத்தனர். பால்மா, சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய குறித்த பொதியானது, பொதுமக்கள் நன்மையடையும் வகையில் பழைய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, மக்களின் தேவைகளை நிறைவேற்றி வரும் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# முதலைகளால் மீனவர்கள் அச்சம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர்நன்னீர் ஆற்றிலும், இடிமண்துறை முதலை மடு ஆறுகளிலும் முதலைகள் உலவுவதால் மீனவர்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு முதலைகள் உலவுவதை, விவசாயிகள், தோட்டச் செய்கையாளர்கள், கால்நடை வளர்ப்போர்கள், நன்னீர் மீன்பிடியாளர்கள் அவதானித்துள்ளனர்.

இதனால், மீனவர்கள் தங்களது தொழில்களைச் செய்ய முடியாதுள்ளதாக தெரிவிக்கின்றனர். மேலும், மேய்ச்சலுக்குச் சென்று நீர் அருந்தச் செல்லும் கால்நடைகளையும் இந்த முதலைகள் பிடித்து இழுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கல்முனை மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம்

(கல்முனை விஷேட நிருபர்)



கல்முனை மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக் நீக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை கல்முனை மாநகர சபைக்கான தெரிவத்தாட்சி அதிகாரி, சுகன் ஸ்ரீநாத் அத்தநாயக வெளியிட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அஹமட்லெப்பை றபீக் என்பவரது கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்துள்ளதால், அவரது மாநகர சபையின் உறுப்பினர் பதவியும் இழக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவி வகித்துக் கொண்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கி வந்தார்.

இந்தக் குற்றச்சாட்டில் ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்படுத்தப்பட்ட இவர், சுதந்திரக் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். இது குறித்து அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவினால் தேர்தல்கள் திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மர்ஹூம் இசட்.ஏ.எச்.ரஹ்மான் சில மாதங்கள் பதவி வகித்து வந்த நிலையில், பொலிஸ் சேவையில் மீண்டும் இணைவதற்காக அவர் இப்பதவியை இராஜினாமா செய்தார். இதையடுத்து, அஹமட்லெப்பை றபீக் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணவைப்பு இயந்திர சேவை அங்குரார்ப்பணம்

(பாலமுனை தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று மக்கள் வங்கி கிளையில் தன்னியக்க பணம் வைப்பு இயந்திரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் முகாமையாளர் எம்.பீ.எம். அன்வர் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில், மக்கள் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் பீ.எம்.பிரமநாத்,பிரதம அதிதியாகவும், பிராந்திய முகாமையாளர், எஸ்.ரீ.குணரத்ன உதவி பிராந்திய முகாமையாளர் எஸ்.பீ.சூரிய குமார ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பல்வேறுபட்ட வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன அவர்களின் தேவைகளை இலகுவாக நிவர்த்தி செய்வதற்கு இந்த தானியக்க இயந்திரத்தை பயன்படுத்த முடியும் திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களும் இங்கு பணங்களை வைப்பிலிட முடிந்துள்ளது.

# அல்லை நகர மக்களுக்கு உதவிகள்

(தோப்பூர் குறூப் நிருபர்)

தோப்பூர் உப பிரதேச செயலக அல்லை நகர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட ஹைராத் ஜும்ஆ பள்ளிபரிபாலன சபையினால், பொதுமக்களின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை அமுல்படுத்த உள்ளதாக பள்ளிபரிபாலன சபையின் தலைவர் பி.ரி.எம். இஸ்மாயில் தெரிவித்தார்.

இதனடிப்படையில், நீண்ட காலமாக விடுபட்டுள்ள குர்ஆன் மத்ரசாவை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதுடன், பகுதிநேர குர்ஆன் ஹிப்ழ் வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# அக்குபஞ்சர் சிகிச்சை முறைகளை மேம்படுத்தும் செயற்பாடுகள் விஸ்தரிப்பு

(மண்டூர் குறூப் நிருபர்)



கிழக்கில் அக்குபஞ்சர் சிகிச்சை முறைகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், அக்குபஞ்சர் சிகிச்சை உபகரணங்கள் வழங்கப்படுவது டன்,ஆயுர்வேத வைத்தியர்களுக்கு விளக்கப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. ஸ்ரீதர் தலைமையில் மாகாண முதலமைச்சின் கூட்ட மண்டபத்தில் இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. திருகோணமலை பிராந்திய ஆயுர்வேத உத்தியோகத்தர்கள், பஞ்சகர்ம வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் உட்பட பலர், சிகிச்சை தொடர்பான விளக்கப் பயிற்சிகளை பெற்றுக்கொண்டனர்.

# அறிவு, ஆளுமையின் உச்சங்களை தொட பட்டப்பின்படிப்பு உதவும்

(நிந்தவூர் குறூப் நிருபர்)

பட்டப்பின் படிப்பு, மூங்கில் மரத்தைப் போன்று உச்சம் தொடும் அளவுக்கு பயனளிக்குமென உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் பட்டப்பின் படிப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் (02) கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய அவர்,பட்டப்பின் படிப்பு என்பது, ஏற்கனவே பல்கலைக்கழக பட்டம் பெற்றிருந்தும், கல்லூரி நிலைக்கு அப்பால் ஒரு பாடத்தை படிப்பதைச் சொல்லலாம். இப்படிப்பால், ஆரம்பத்திலிருந்தே தொழில் கூட்டாண்மை மூலம் பயனடையலாம். எதிர்கால வேலைகளை சமாளிப்பதற்கு தேவையான திறன்களையும் இக்கல்வி விருத்தி செய்கிறது. மற்றும் அனுபவத்துடன் பட்டம் பெறுவது, தொழில்துறையினர் எதிர்கொள்ளும் சிக்கலான உலகப் பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளை வடிவமைக்கவும் உதவுகிறது.

தொழில்துறையின் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்ய மேம்பட்ட தலைமைத்துவ திறன்களையும் இந்தப் படிப்பு வழங்குகிறது. ஆற்றல் உட்கட்டமைப்பு மற்றும் உலகளாவிய சவால்களுக்கு உலக தீர்வுகளை வடிவமைக்க இக்கல்வியே அவசியம்.

பட்டப்பின் படிப்புகளில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன. கற்பிக்கப்படும் படிப்புக்கள், ஆராய்ச்சி பட்டங்கள், மாற்றுப் படிப்புகள் மற்றும் தொழில்முறை தகுதிகள் என்பனவே அவை.

அறிவைக் கட்டியெழுப்பவும், அறிவுசார் ஆர்வங்களை விரிவுபடுத்தும் வழியாகவும், இப்படிப்பு திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

# பசுமையான வீட்டுத் தோட்ட திட்டம் பயிர்க்கன்றுகள் வழங்கி வைப்பு

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

பசுமையான வீட்டுத் தோட்டம் (2022) வேலைத் திட்டத்தின் கீழ், சமூர்த்திப் பயனாளிகளுக்கு பயிர்க்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு பயிர்க்கன்றுகள் வழங்கி வைக்கும் முதல் வார நிகழ்வில், சுமார் 50 பயனாளிகள் நன்மையடைந்தனர். கறிமிளகாய், மிளகாய், தக்காளி, கத்தரி ஆகிய நான்கு வகை பயிர்க்கன்றுகள் இதன்போது வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே. அப்துல் ஜலீலின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் என்.ரீ.மசூர், சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.எல். அஸீஸ், சமூர்த்தி திட்ட உதவியாளர் ஏ.எஸ்.எம். உனைஸ், சமூகமட்ட அமைப்புக்களுக்கான முகாமையாளர் எம்.எப்.எம். நவாஸ் உள்ளிட்ட சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பயிர்க்கன்றுகளை வழங்கினர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மொத்தம் 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நாற்றுமேடைகள் தயார் செய்யப்பட்டு, அவற்றிலிருந்து இப்பயிர்க்கன்றுகள் விநியோகிக்கப்படுவதாகவும், இத்திட்டத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் சுமார் 156 சமுர்த்திப் பயனாளிகள் வரை நன்மையடைவர் எனவும் சமுர்த்தி திட்டமுகாமையாளர் எஸ்.எல். அஸீஸ் தெரிவித்தார்.

# கண்ணிவெடி அகற்றும் பகுதிகளுக்கு அமெரிக்க தூதரக அதிகாரிகள் விஜயம்

(பரந்தன் குறூப் நிருபர்)





கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் கொடையாளர்கள் மற்றும், அமெரிக்க தூதரக அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி முகமாலை மேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கு அமெரிக்காவிலிருந்து கொடையாளர்களால் நிதியுதவி வழங்கப்பட்டு கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களால் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இப்பணியின் முன்னேற்றங்கள் தொடர்பில் தொடர்ந்து கள ஆய்வினை மேற்கொள்வதற்காக நேற்றைய தினம் குறித்த குழுவினர் வருகை தந்திருந்தனர்.

கண்ணிவெடி அகற்றும் பணிக்காக நன்கொடைகளை வழங்கும் அமெரிக்கர்களின் பிரதிநிதிகளான Rodne Robedia, Briget R.Hess ஆகிய இருவர்,இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளான Rulay Woodside, Shanlbeep Croos ஆகியோரும் இவ்விஜயத்தின் போது கலந்துகொண்டனர்.

முகமாலை மேற்கு பகுதியில் டாஸ் (DASH) நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடியகற்றும் மனிதாபிமான பணியினை பார்வையிட்டனர். இதன்போது அப்பகுதியில் மீட்கப்பட்டு வரும் ஆபத்தான வெடிபொருட்கள் தொடர்பிலும் அதனை அகற்றுவதில் ஏற்படுகின்ற சவால்கள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. மேலும் இதுவரை அகற்றப்பட்ட கண்ணிவெடிகள், பூரணப்படுத்தப்பட்ட பகுதிகள், மேற்கொள்ளப்படவேண்டிய பகுதிகள், தேவைப்பாடுகள் உள்ளிட்ட விளக்கமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## கண்ணிவெடிகள் தொடர்பில் விழிப்புணர்வு



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி பொதுச்சந்தையில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான டாஸ் அமைப்பினரால் கண்ணிவெடி விழிப்புணர்வு செயற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சர்வதேச கண்ணிவெடிகள் செயற்பாட்டுத் தினத்தை முன்னிட்டு (DASH) சமூக நல்லிணக்கத்திற்கான டெல்வோன் உதவி அமைப்பு (DelvonAssistance For Social Harmony) கிளிநொச்சி கரைச்சி பொது சந்தையில் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை (06) மேற்கொண்டனர்.

கண்ணிவெடிகள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டுமென இதன்போது அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் பொது மக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்படும் என டாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மோசடி; மக்கள் எதிர்ப்பு



வவுனியா விசேட நிருபர்

வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (06.04) மதியம் 12.00 மணியளவில் எரிபொருள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் 45 நிமிடங்கள் வரை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஈரப்பெரியகுளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு டீசலை பெற்றுக்கொள்வதற்காக வாகனங்கள் காத்திருந்த போது டீசல் முடிவடைந்துள்ளதாக எரிபொருள் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். டீசல் இருந்த போதிலும், தற்போது டீசல் முடிவடைந்து விட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறுவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஏ9 வீதியின் குறுக்கே இரு பஸ்களை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ9 வீதியின் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்ததுடன், நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்தன. சம்பவ இடத்திற்கு ஈரப்பெரியகுளம் பொலிஸார் உடனடியாக வருகை தந்து எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளருடன் கலந்துரையாடினார். அத்தியாவசியத் தேவைக்காக டீசல் இருப்பதாக இதன்போது முகாமையாளர் தெரிவித்தார். இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த 2500 லீற்றர் டீசல் வாகனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனையடுத்து போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையடுத்து ஏ9 வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

# குளத்தை அளவிட சென்றவர் படகு கவிழ்ந்ததில் உயிரிழப்பு





ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் (வயது 25) நீரில் மூழ்கி பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரதேச செயலாளர் பிரிவின் காதலியார் சம்மணங்குளம் கிராம அலுவலர் பிரிவின் ஏம்பகுளம் குளத்தில் நில அளவை திணைக்களத்தினர் நில அளவை பணியில் ஈடுபட்டுள்ளனர்

இதன்போது நில அளவைத் திணைக்களத்தின் பணியாளராக பணிபுரிந்து வந்த வித்தியாபுரம் பகுதியை சேர்ந்த ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் நமசிவாயம் டிலக்சன் உள்ளிட்ட நான்கு பேர் நில அளவை பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது நில அளவை பணிக்காக குளத்தில் இறங்கியபோதே சேற்றில் புதையுண்டு நீரில் மூழ்கி பலியாகியுள்ளார்.

கிராம மக்கள் இராணுவத்தினர் இணைந்து சடலத்தினை மீட்டுள்ளனர். தற்போது சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குளத்தில் நில அளவு பணிக்கு பணியாளர்களை பொறுப்பற்றதனமாக இறக்கிய அதிகாரிகள் மீது பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாவகச்சேரி மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக புகார்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் இதனை சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

சாவகச்சேரி மீன் சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அவ்வாறான பழுதடைந்த மீன்களே சாவகச்சேரியிலுள்ள உணவகங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

இது சந்தையில் உரிய தரப்பினருக்கு தெரிந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென சாவகச்சேரி நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

இவ்வாறான தரமற்ற உணவு வகைகளை உட்கொண்ட 25 ற்கும் மேற்பட்ட சிறார்கள் அண்மையில் வயிற்றோட்டம் உள்ளிட்ட காரணங்களால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாக மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

## அரச உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல்

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு தேவிபுரம் மஞ்சள் பாலத்தடியில் நள்ளிரவு பயணித்த அரச உத்தியோகத்தர் உள்ளிட்ட இரு சகோதரர்கள் மீது இளைஞர் குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனால் கடுமையாக பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31.03.2022 அன்று தேவிபுரம் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றின் போது திருமண நிகழ்வொன்றுக்குள் நுழைந்த அழையா விருந்தாளி ஒருவர் சினிமா பாடல்களை ஒலிப்பரப்புமாறு தெரிவித்த கருத்தை தொடர்ந்து எழுந்த பிரச்சினை காரணமாகவே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

திருமண நிகழ்வு இடம்பெற்ற இரவு வேளை ஒரு கும்பல் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதன்போது படுகாயமடைந்த இருவரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை (06.04.2022) புதுக்குடியிருப்பு பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்.

## எரிபொருளுக்காக வரிசையில் நின்ற பஸ் மோதி ஒருவர் பலி

யாழ்.விசேட நிருபர்

எரிபொருளுக்காக வரிசையில் நின்ற தனியார் பஸ் சாரதியின் கவனக்குறைவினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், நடைபெற்ற இச்சம்பவத்தில் ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் சதீஸ் ( வயது 37 ) என்பவரே உயிரிழந்தார் .

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த பயணி யாழிலிருந்து வசாவிளான் நோக்கி பஸ்சில் பயணித்துள்ளார். பயணத்தின் போது, பஸ்சில் தூங்கியமையால், வசாவிளானில் இறங்கவில்லை. பஸ் நடத்துனரும், அதனை கவனிக்கவில்லை. அவர் மீண்டும் வசாவிளான் செல்வதற்காக யாழ்ப்பாணம் நோக்கி பஸ்சில் பயணித்த போது , புன்னாலைக்கட்டுவனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுக்காக வரிசையில் பஸ் காத்திருந்துள்ளது. அதன்போது பயணி பஸ்சிலிருந்து கீழே இறங்கி நிலத்தில் அமர்ந்திருந்துள்ளார். அதனை அவதானிக்க தவறிய சாரதி பஸ்சை செலுத்த ஆரம்பித்த போது பயணி மீது பஸ் ஏறியுள்ளது .

பயணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அதனையடுத்து, பஸ் சாரதி அங்கிருந்து தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் நேற்றுமுன்தினம் (05.04) பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, குருமன்காடு பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே 10 கிராம் ஐஸ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை உடன் வைத்திருந்த குற்றச்சாட்டில் மணிபுரம் பகுதியைச் சேர்ந்த 31 வயது மற்றும் 21 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## லஞ்சம் வாங்கிய நீதிமன்ற அலுவலர் கைது

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

நீதிமன்ற அலுவலர் ஒருவர் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் இவர் (5) கைது செய்யப்பட்டார்.

30,000 ரூபா லஞ்சம் வாங்கும் போது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தற்போது இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## நடமாடும் சேவை


முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கு (Mul /90) கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு புதிய நீர் இணைப்புகளை வழங்கும் நடமாடும் சேவையானது எதிர்வரும் 8,9 04. 2022 சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் வீடு வீடாக வருகை தந்து புதிய நீர் இணைப்புக்கான விண்ணப்ப படிவங்களை பொது மக்களுக்கு வழங்கவுள்ளனர்.

விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொண்ட பொது மக்கள் அதனை பூர்த்தி செய்து கோரப்பட்ட ஆவணங்களுடன் எதிர்வரும் 21.04.2022 அன்று கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

மேலும் இது தொடர்பில் பொது மக்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தின் 0212283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நகர்வலம்



# சிறப்பான வணக்க வழிபாடுகள் மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வை பெறுவோம்

(வெலிகம தினகரன் நிருபர்)

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் ரமழான் மாதத்தை முஸ்லிம்கள் சிறப்பான வணக்க வழிபாடுகள் மற்றும் இன்னோரன்ன வழிபாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நெருக்கடிகளுக்கு தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியுமென உலமாக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இந்த அடிப்படையில் வெலிகம பகுதியிலுள்ள பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஸாவியாக்கள் ஆகியவற்றில் இம்முறை தராவீஹ் தொழுகை, ஹிஸ்பு மஜ்லிஸ்கள், மார்க்க விளக்கவுரைகள், விசேட பயான்கள் போன்ற இன்னோரன்ன வணக்க வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களாக பல்வேறு தடங்கல்களினால் சிறப்பான முறையில் ரமழான் மாதத்தை கழிக்கமுடியாமல் இருந்தது. எனினும் இம்முறை சிறப்பாக ரமழான் மாதம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மேலும் பெண்களுக்காகவும் வீடுகளில் தராவீஹ் தொழுகைகள் ஏற்பாடாகியிருக்கின்றன. கஞ்சி விநியோகங்களும் வெலிகம பகுதி பள்ளிவாசல்களின் மூலம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

## உலமாக்கள் வேண்டுகோள்

தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு இஸ்திஃபாரே பரிகாரமாக அமைகின்றது. இதனை கருத்திற் கொண்டு இந்த ரமழான் மாதத்தை வணக்க வழிபாடுகளிலும், இஸ்திஃபார், தௌபாக்கள், குர்ஆன் திலாவத், ஸதகாக்களில் ஈடுபட்டு இம் மாதத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு உலமாக்கள் வழிகாட்டியுள்ளனர்.

# 100 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)



புனித ரமழானை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட சுமார் 100 ஏழைக் குடும்பங்களுக்கு கனேடியன் இலங்கை முஸ்லிம் பெண்கள் அமைப்பினால் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் இலங்கை இளம் பெண்கள் மாதர் அமைப்பினால் விஷேட தேவையுடைய இரண்டு வயோதிபர்களுக்கு சக்கர நாட்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன.



தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் இளம் பெண்கள் மாதர் அமைப்பின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைப்பின் ஆலோசகர் காலித் பாறுக், அமைப்பின் பிரதி பேற்றன் தேசமான்ய மர்லியா சித்தீக் உட்பட அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

# அம்ரா பர்ஹத் 152 புள்ளிகள்

ஏ.எஸ்.எம்.ஜாவித்



குருணாகல் குளியாப்பிட்டி கல்வி வலய அல்குமைரா முஸ்லிம் வித்தியாலயத்தின் எம். எப்.அம்ரா பர்ஹத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இப்பாடசாலையில் இவர் மட்டுமே வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவர் எதண்டவெல வெளகம கிராமத்தைச் சேர்ந்த பர்னாஸ், அஸ்ரா தம்பதிகளின் புதல்வியாவார்.



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் 43 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதவாச்சி பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ஹிரல்லுகம கிராமத்தில் வசித்துவரும் ஊனமுற்ற சமுர்த்தி பயனாளி குடும்பம் ஒன்றிற்கு வீடு ஒன்றை அமைப்பதற்கு அடிக்கல் நட்டிவைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# பாடசாலை மாணவிகளை படம் பிடித்த நபர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அனுராதபுரம் வலிசிங்ஹ ஹரிச்சந்திர வித்தியாலயத்திற்கு முன்னால் " ஸ்மார்ட்" வகை கையடக்க தொலைபேசி மூலம் பாடசாலை மாணவிகளின் ஆடைகளை முறையின்றி வீடியோ படம் எடுத்த 35 வயது விமானப்படை அதிகாரி ஒருவரை கடந்த (04) அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர். கட்டுநாயக்க விமானப்படை முகாமில் கடமையாற்றி வரும் மேற்படி விமானப்படை வீரரே கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த (04) மதியம் 03.00 மணியளவில் பாடசாலைக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்று பாதுகாப்பு தலை கவசத்திற்குள் தொலைபேசியை வைத்து மாணவிகளின் ஆடைகளை முறையின்றி வீடியோ எடுத்துள்ளார்.

குறித்த நபரின் செயற்பாடுகளில் சந்தேகம் கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் அது தொடர்பில் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின்படி இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டதன் பின்னர் தொலைபேசியை சரிபார்த்த போது பாடசாலை மாணவிகளின் பல நிர்வாணக் காட்சிகள் வீடியோவில் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் (05) நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் லக்மால் விஜேரத்ன உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பெண் பிரதிநிதிகளை வலுவூட்டும் நிகழ்ச்சி

(புத்தளம் தினகரன் நிருபர்)

கனேடிய நிறுவனமொன்றினால் ஐந்து உள்ளூராட்சி மன்றங்களைத் தெரிவு செய்து அவற்றின் பெண் பிரதிநிதிகளை வலுவூட்டும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் புத்தளம் நகர பிதா சார்பாக நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதுர்தீன் தலைமையில் நகர சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கையில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துக் காணப்படுகின்ற போதிலும் அரசியலில் அவர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

# முன்பள்ளி ஆசிரியைகளுக்கு முழுநாள் செயலமர்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)






புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்குகின்ற முன்பள்ளி பாடசாலைகளின் ஆசிரியைகளுக்கு முழு நாள் செயலமர்வொன்று அண்மையில் புத்தளம் சவீவபுரத்தில் அமைந்துள்ள முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

புத்தளம் முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எச்.ஆர். ரூபிகா பியதர்சினி ஜயமஹாவின் வழிகாட்டலில், புத்தளம் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி அதிகாரி ஜீ.டீ.டீ. கம்பத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதான வளவாளராக புத்தளம் மாவட்ட செயலகத்தின் கலாசார அபிவிருத்தி அதிகாரி டபிள்யூ. எம். அயேஷா மதுஸானி வீரசிங்க கலந்து கொண்டார்.

எதிர்வரும் தமிழ் , சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு அதன் கலாசாரம் பற்றிய தாத்பரியங்களை மாணவர்களுக்கு போதிக்கும் வகையில் இந்த வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது.

# தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக AIA இன்ஷூரன்ஸ்

AIA இன்ஷூரன்ஸ் மிகச்சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக மூன்றாவது வருடமாகவும் மீண்டும் சர்வதேச ரீதியில் கௌரவிக்கப்பட்டுள்ளது. AIA சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற கெபிடல் பைனான்ஸ் இண்டர்நெஷனல் நிறுவனத்தினால் 2021 இற்காக இந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்த கௌரவமிக்க அங்கீகாரமானது இலங்கையினுடைய நிதித்துறை மற்றும் உலகளாவிய பொருளாதாரம் ஆகியவற்றினது உன்னிப்பான ஆய்வின் அடிப்படையிலான பிரதான செயற்திறன் குறிகாட்டிகளின் ஆழமான மதிப்பாய்வினைத் தொடர்ந்தே வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதானது மிகச்சிறந்த காப்புறுதித் திட்டங்கள் மற்றும் சேவைகள், மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் இலங்கை மக்களுக்கான சேவைகள் சார்பாக இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறைக்கு AIA இனால் வழங்கப்படும் குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்கான சான்றாகவும் அமைந்திருந்தது.





இந்த விருதினை வெற்றி பெறுவதற்குப் பங்களிப்புச் செய்த பல சிறப்பான பண்புகளை AIA தன்னகத்தே கொண்டுள்ளதுடன், இலங்கையின் ஆயுள் காப்புறுதி நிறுவனங்களில் மிகச்சிறந்த 6 காப்புறுதிச் சேவை வழங்குநர்கள் மத்தியில் மிகவும் உறுதியான மூலதன நிறைவு விகிதத்தினை (AIA) நிறுவனம் உள்ளடக்கியுள்ளது. நிறுவனம் 2021 இன் நிறைவில் 547 ஒழுங்குமுறையான மூலதன நிறைவு விகிதத்தினை (AIA) பதிவு செய்திருந்தது. இது உண்மையில் ஒழுங்குபடுத்துனரால் நிர்ணயிக்கப்படுகின்ற மூலதன நிறைவு விகிதத்தினை விட நான்கு மடங்கு அதிகமானதாகும். நிறுவனத்தின் வியாபாரச் செயற்பாட்டுச் சூழலில் அதிர்ச்சிகளை தாங்கும் AIA இன் திறனை இது மேலும் செயல் விளக்குவதோடு, வாடிக்கையாளர்களுக்குத் தொடர்ச்சியாக தனது உறுதியான வாக்குறுதிகளையும் வழங்குகின்றது. மேலும் இது உயர் தரமான முதலீடுகளில் கவனம் செலுத்தும் நிறுவனத்தினுடைய விவேகமான முதலீட்டு மூலோபாயத்தினாலும் உந்தப்படுகின்றது.

# நெருக்கடி நிலையால் ஆடைத் தொழிற்துறைக்கு பாதிப்புகள் ஏற்படுமென கடும் எச்சரிக்கை

